குடியரசு

V.1. No.48. 29 NOV 1928

ணா211, N28
N28.1.48.
189031

Reg. No. M.
2324.

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை

Vol 1.] 1928வரு நவம்பர்மீ 29உ [No. 48.

OF THE REGISTRAR
20 SEP 1929
MADRAS

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	தலையங்கம் (Leader).	941
2.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும். T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L.	943
3.	உமார் கயாம் என்பவர்தம் உறுதிமொழி K. இராஜகோபாலன்	946
4.	தமிழ்ப் பாடம்.	948
5.	குற்றமும் தண்டனையும்	950
6.	கம்பராமாயணம். T. N. சேஷாசலம் B. A., B. L.	952
7.	வானசாஸ்திரம்	954
8.	காந்திமதி (A Novel). T. N. சேஷாசலம் B. A., B. L.	955
9.	வர்த்தமானம்.	959

189031

கலா நிலயம்.

ஆங்கிலத்தாலழிவில்லை.

தற்காலம் நிலவிவரும் பல்வேறு திறத்தவாய ஆங்கிலப் பத்திரிகைகளி லெல்லாம் அச்சினுலும் அமைப்பினுலும், உள்ளடங்கிய விடயப்பெருமை யாலும் தலைசிறந்து முதல் விளங்கும் திரிவேணி என்னும் பத்திரிகையின் செப்டம்பர் மாதத் திதழில் ஸ்ரீ. K. கிருஷ்ண ஸோமயாஜி என்ற அறிஞர் "சமஸ்கிருதக் கல்வியும்; அதன் பயனும்" எனவோர் கட்டுரை எழுதியுள்ளார். அதன்கண், வடமொழிக் கல்வியை ஆதாரமாகக்கொண்டு நிகழ்ந்த பண்டைநாள் நாகரிகத்திற்கும் ஆங்கிலக் கல்வியைப் பின்பற்றி எழும் இற்றைநாள் நாகரிகத்திற்கும் இருக்கின்ற வேறுபாடுகளையும், அவ்வேறுபாடுகள் தோன்றுவதன் காரணங்களையும் நுட்பமாய் ஆய்ந்து விளக்கி, "ஒருபுறம், உரிமையும் விஷய ஆராய்ச்சியும் பொதுஜன வாழ்க்கைக்குழப்பமும் தானென்னும் நினைவும் அதிகாரதாகமும் கூடி நிற்கின்றன. மறுபுறம், கடமையும் பக்தியும் ஒழுங்கும், மெய்ம்மையின்பால் அழகின்பால் நாட்டமும் கூடி நிற்கின்றன. (முன்னது ஆங்கில நாகரிகத்திற்குரியது. பின்னது சமஸ்கிருத நாகரிகத்திற் குரியது). இவை இரண்டினில், வழிகாட்டி அழைத்தேக வேண்டியது எது? தொடரவேண்டியது எது? இதனைத் தேர்வது அருமையன்று. யாவரும் அறிவர்" என்றுதம் கட்டுரையைச் செவ்விதின் முடிக்கின்றார். உண்மை பல இவ்வுரைகளுள் பொதிந்திருக்கின்றன. இம்முடிவு அறிவுகொண்டு ஆராய்வோர் யாவருக்கும் ஏற்றவொரு முடிவே யாகும். மேனாட்டாரால் நாகரிகம் என்று கருதப்படுகின்றவாழ்க்கையிலும், அவ்வாழ்க்கையை இயக்கும் எண்ணத்திலும் இக்கட்டுரைகாரர் செப்புகின்ற தீமைகள் இருக்கின்றன வென்பதற்கு ஐயமில்லை. ஸமஸ்கிருத நாகரிகம் செழித்திருந்த பண்டைநாள்களில் இங்கு இவர் பகரும் நலங்கள்யாவும் சிறந்திருந்தன வென்பதையும் பலவித சான்றுகளைக்கொண்டு நம்பலாம். ஆனால், அன்னபடி தூயவர்களாய் உன்னதநிலையில் இருந்த இந்தியர்களை இவ்வாங்கிலக் கல்விதான் புகுந்து கெடுத்துவிட்டதென்றும், மீண்டும் நாம் அவ்வடமொழிக் கலைப்பயிற்சியையே யடைந்தாலன்றி உய்வதற்கு வழி பிறிது இல்லை என்றும் சாதிக்க இவர் நினைக்கின்றாரென மதிக்கின்றோம். ஏனெனில் அவர்தம் கட்டுரையின் இடையே இவ்வாறு கூறுகின்றார்:—

"அரசியல் நிலையில்தான் விழுந்துகிடக்கின்றோமென்றால், நமது வாழ்க்கையிலும் இலக்கியங்களிலும் சிறப்புற்றிருப்பன வெல்லாம், முதலில் நம்மை ஆள்பவர்களாலும் பிறகு நம்மாலேயும், பின்தள்ளி ஒதுக்கப்பட்டுக் கிடக்கின்றன. சமிஸ்கிருதத்தைப் பற்றி நம்மவர்களுக்குள்ளே இருக்கும் அறிவு நீ எண்ணுவதிலும் குறைவு; அதன்பால்உள்ள மூடப் பகையோ அதிகம். இதனை நான் என் அனுபவத்திற் கண்டபடி கூறுகின்றேனாதலால் ஆச்சரியப்பட வேண்டா. நாம் கவிழ்ந்து கிடக்கும் இந்நிலைக்குக் காரணம் அரசியலே (Politics) என்பதை ஒருவராலும் மறுக்க இயலாது. நம்மை ஆளும் எசமானர்களின் நாகரிகம் (Culture) நம்முடைய சமஸ்கிருத நாகரிகத்திற்கு நேர் எதிரானது என்பதை ஒருவராலும் மறுக்க இயலாது. அவர்கள் தங்களுடைய நாகரிகத்தை நம் தலையில்சுமத்துவதற்காக நம்முடைய நாகரிகத்தை வதைக்கமுயன்று வதைத்தும் விட்டார்கள் என்னும் இதனையும் ஒருவராலும் மறுக்க இயலாது. ஐய, கேள். தற்கால இந்தியக் கல்விக் கோர் பேயா

யிருந்த லார்ட் மெக்காலே தானே சொல்வதைக் கேள். 1836 வருஷம் தன் தந்தைக்கு எழுதின வொரு கடிதத்தில் பின்வருமாறு கூறுகின்றான்— "இந்த ஆங்கிலக் கல்வி இந்தியர்கள்பால் செய்கின்ற காரியம் மிகவும் அற்புதமா யிருக்கின்றது. ஆங்கிலக் கல்வி பெற்ற இந்தியன் எவனும் பிறகு மனப்பூர்வமாய்த் தன் மதத்தினிடத்தில் பற்று உடையவனாக இருப்பதில்லை. சிலர் தங்கள் மதத்திலேயே இருப்பதாகப் பாவனை புரிகின்றனர். ஆனால் அனேகர் தங்கள் வேதங்களை நம்புவதில்லை என்று பகிரங்கமாகச் சொல்கின்றனர். சிலர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிச் சேர்கின்றனர். கல்வியைப் பற்றி நாம் செய்துவரும் ஏற்பாடு நடக்குமானால், வங்காளத்தில் கண்ணியம் வாய்ந்த மாந்தர் வகுப்பினரிடையே விக்ரகங்களை ஆராதிப்பவன் முப்பது வருடங்களுக்கப்பால் ஒருவனும் இருக்க மாட்டான் என்பது நிச்சயம்." இந்தியாவின் ஆங்கிலக் கல்விக்கும் நாகரிகத்திற்கும் 'தெய்வம்' இது. இந்தச சூழ்ச்சித் தலைவன்படி, ஆங்கிலமும் ஆங்கிலக் கலைப் பயிற்சியும் முதலில் நம்மை நம் மதத்திலிருந்து கவிழ்த்துத் துரோகிகளாக்கிப் பிறகு சந்தேகிகளாக மாற்றி வேறு மதத்தைச்சேரவும் செய்ய வேண்டும் என்பது கருத்து. உலக சரித்திரத்தில் இதனைவிட கேடுகெட்ட துக்கநாடகம்வேறொன்றுமில்லை. அரசியலை, மானத சாஸ்திரத்தோடும் தர்ம சாஸ்திரத்தோடும் சேர்த்து, ஒருவனையன்று இருவரை அன்று, சனத்தொகையையே சாகவைக்கின்ற இரகசியத்தை மெக்காலே கண்டுபிடித்தான். முதல்தர கலைஞனும் நூலாசிரியனுமான அவன் இந்தியர் மனதைப்பற்றி அதற்குள் விஷத்தைப் புகட்டிவிட, நம்நாட்டினேர் மனது குப்புறக் கவிழ்ந்துவிட்டது. துக்கத்தினும் துக்கமான நாடகம் இதனை நம் நாட்டின் அரங்கிலேயே நடிக்கக் காண்கின்றீர். மெக்காலேயைவிடப் பெரிய தீர்க்கதரிசி பிறந்ததில்லை. யுத்தத்தில் மாய்ப்பதுபோல் உயிர்களைக் கொள்ளையில் கொல்லும் வழி இதன் திறம் கண்டு பிடித்ததில்லை; ஒருதேசத்தின் நாகரிகத்திற்கும் கலைப்பயிற்சிக்கும் விரோதமாக இதனைவிடக் கொடியகுற்றம் வேறெங்கும் இழைத்ததுமில்லை. சரிதம் முழுவதும் சேர்ந்தால் நாற்றம் மூக்கை யடைக்கின்றது. இன்னும் பல இதனைப் பற்றிச் சொல்லாதிருப்பதே நலம். இந்தியர் மனம் கவிழ்ந்துவிட்ட தென்பது யாவற்றினும் முன்வந்து நிற்கின்றது. பள்ளிக்கூடங்களிற் போய்ப் பாருங்கள், கலாசாலைகளுக்குப் போங்கள்; உத்தியோக நிலயங்களுக்கும் சட்டசபைகளுக்கும் செல்லுங்கள்; பொதுஜனக் கூட்டங்களுக்குப் போங்கள், கடைவீதிக்குப் போங்கள். சத்தியம் தன் இடத்தைப் பொய்யினிற்குக் கொடுத்துவிட்டுப் போய்விட்டது. தர்மம் இருந்த இடத்தில் இப்பொழுது இருப்பது பாவம். பக்தி போக விசாரணை வந்திருக்கின்றது. கடமைக்குப் பதிலாக உரிமையும் ஒழுங்கிற்குப் பதிலாகக் குழப்பமும், ஆழ்ந்த சிந்தனைக்குப் பதிலாக ஹாஸ்யக்கூத்தும்; பக்ஷத்திற்குப் பதிலாகக் கட்சிகளும், வாய்மைக்குப் பதிலாகச் சுத்த மோசமும் புகுந்திருக்கின்றன. எம்மருங்கும் நாம் பார்ப்பது சாக் கூத்தன்றிப் பிறிதொன்றில்லை. இதுதான் நாம் புதிதாய் மேற்கொண்டிருக்கும் காரியம். இந்தக் கொடிய நோய்க்கு மருந்து ஒன்றே. நாம் இழந்த மனதை மீண்டும் பெறவேண்டும்—அதுதான் சமஸ்கிருதம். நாம் இந்தியர்களா யிருந்துவர வேண்டுமானல் நமக்குரிய கலைப்பயிற்சி சமஸ்கிருதக் கலைப்பயிற்சியே. அது, வாய்மை தர்மம் என்னும் உயிரின் இருபெருந் தத்துவங்களை ஆதாரமாகக் கொண்டிருப்பதால், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகியும் தன்னிலை தளராமல் நிற்கின்றது. அதன் வாய்மை, பிரகிரிதியின் வாய்மை; அதன் தர்மம் அல்லது நற்குணம்-மானுட ஆன்மாவின் நற்குணமே, அதன் நற்குணம்"

ஸ்ரீமான் கிருஷ்ண ஸோமயாஜி ஒருவராலும் மறுப்பதற்கியலாத விஷயங்களையே எடுத்துக் காட்டியிருக்கின்றார். தற்காலம் நாம் எம்மருங்கும் கூத்தாடக் காண்பது மரணமே என்றதும் யாவரும் வருந்தத்தக்க நிகழ்ச்சியே. கழிந்தனென்று அவர் கூறும் நலங்கள் யாவும் கழிந்தனவே. புகுந்துளவென்று அவர் புகலும் தீமைகளும் புகுந்தே யுள. இனி, நாம் இழந்துவிட்ட பண்டைநாள் பெருமைநிலையை மீண்டும் பெறுவதற்கு அச்சமஸ்கிருதப் பயிற்சியே மார்க்கம் ஆகும் என்கின்றார். "ஏன், தமிழ்க்கலைப் பயிற்சி போதாதோ? பண்டைத் தமிழர் நாகரிகம் மற்றெதற்கும் தாழ்வாமோ!" என்று இன்னபடி இகல்கொண்டு வாதிப்பது இங்கு எமது கருத்தன்று. சமஸ்கிருதத்திற்கும் தமிழிற்கும், வழங்குமொழி யொன்றே வேறுவேறன்றி, மற்று அவைகளின் நோக்கத்திலும் கலைப்பயிற்சியிலும் நாகரிகத்திலும் பேதமெதுவும் இல்லை என்பார் சமரச சித்தமுடைய சிலர். சமஸ்கிருதமே படையெடுத்துத் தமிழர் நாகரிகத்தைச் சிதைத்து விட்டது என்று — (உண்மையில் நினைக்கின்றார்களோ யாதோ அறியோம்)—சொல்வாருமுளர்.

இது எவ்வாறாயினும் ஆகுக. நாம் கெட்டதெல்லாம் ஆங்கிலம் கற்றதால் வந்த கேடு என்று இவர் கூறுவது ஒருசிறிது உண்மைபோல் தோன்றினும் உள்ளாழ்ந்து பார்க்குங்கால் அது முற்றிலும் உண்மையே என ஒப்புக்கொள்வதற்கு இயலாதவரா யிருக்கின்றோம். வடமொழியோ தென்மொழியோ, நம் கலைகளுடன் கலந்து பழகாமல் விட்டதாற்றான் இத்தீங்குக ளெல்லாம் நம் வாழ்க்கையில் வந்து புகுந்தனவென்ற வரையிற் கூறினால் அக்கூற்றொடு யாவரும் மாறுகொள்ளார். ஒருகால் அவ்வாறு நாம் பழகி வராதபடி கெடுத்தவை, அவ்வாங்கிலப் படிப்பென்ற பேரால் நடைபெறும் பாடசாலைகளும் அவ்விடத்தே போதிக்கும் முறைகளும் என்று சொல்வதானாலும் சொல்லலாம். ஆனால் ஆங்கிலக் கலைப்பயிற்சி எவ்வாற்றானும் இழிய வாழ்க்கையே விளையவைக்கும் என்னல், கலை என்பது எங்கும் எவ்விதத் தோற்றத்திலும் ஒரே தத்துவத்தைத் தாங்கியுள தாகையால், ஏற்புடைத்தாகாது. அளவிலே சிறிது ஏற்றந் தாழ்வு கலைப்பயிற்சியின் பயன்வகையில் ஒன்றற்கொன்று இருப்பினும் இருக்கலாம்; குணத்திலோ மாறுபா டிருக்கின்றதென்று எவரும் மதித்திலர். இன்னபல எண்ணங்களுக்கிடையே உண்மை எம்மூலையில் இருக்கின்றதென்று தேடினல் இது விளங்கும். ஆங்கிலம் படித்துப் பட்டம் பெறுகின்றவர்கள் பெரும்பகுதி அப்பாஷையை எழுதவும் படிக்கவும் பேசவும் பயில்கின்றனரே யன்றி அதன் கலைகளைக் கொண்டாடி இடைவிடாது அதனோடு ஆயுளளவு பழகுபவரல்லரே. ஆதலால் ஸ்ரீ. கிருஷ்ண ஸோமயாஜி எடுத்துக்காட்டும் தீங்குகளுக்கெல்லாம் காரணமாயிருப்பது ஆங்கிலக் கலைப்பயிற்சி யன்று. நம்முடைய கலைகளையும் துறந்து அக்கலைகளையும் பற்றாமல் இடையே விழுகின்ற கொடுமை யிது. உயிரிற் குணவாய நற்பொருளை அருந்தாமல் நலிகின்றோமென்றால் தின்னாத மருந்தை விஷமென்று பழிப்பானேன். வாஸ்தவத்தில் மெக்காலேயும் ஆங்கிலக் கல்வியை விஷமென்று அறிந்தே புகட்டினன் என்பதும் நடுநிலை மொழி யாகாது. அவர் கருதியபடி ஜனங்களுக்கு அதனாலேயே நன்மையுண்டென்று மனப்பூர்வமாய் மதித்திருக்கலாம். மதப்பற்றினால் மாற்ற முயல்பவர் அவர் ஒருவரே அல்லர்.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

[926-ம் பக்கத் தொடர்ச்சி]

முடிந்தது முடித்தல்.

2. சீகாளத்திப் புராணம்.

சீகாளத்திப் புராணமும் கண்ணப்பச் சருக்கமொன்று கூறுகின்றது. இக்கதையைப் பாடியவர் சிவப்ரகாச சுவாமிகள். அடிகள் பாடிய பாக்களின் பெருமையைப் பலரும் பாராட்டுவதற் கேற்ப, இக்கதை எல்லா அழகோடும் திகழ்கின்றது. சேக்கிழார் கதையை இருந்தது இருந்தபடி எடுத்து எழுதுவதென்றால் இவர் வேறொரு கதை எழுதவேண்டாமே. ஆனால் வேறுபட எழுதினாலோ அஃது அன்பின் கதை யாகாதெனக் கண்டோம். சேக்கிழார்க்குப் பின்வந்து கண்ணப்பர் கதையைப் பாடிய புலவர்கள் இவ்வாறு இருதலைக் கொள்ளி எறும்பாகின்றனர் என இந்நூலை ஆராய்வதாலும் அறிகின்றோம்.

அடிகள் ஆனந்தக்கூத்தரைப்போலக் காளத்திமலையை நாடாக்கிப் புகழத் தொடங்காது சேக்கிழாரைப் பின்பற்றிப் பொத்தப்பி நாட்டைப் புனைந்துரைக்கின்றார். இளம்பெண்கள் இனிதே விளையாடுவது கண்டு அந்நாடு இன்பத்தில் அமிழ்ந்தது என எழுதத் தொடங்குகின்றார். மதியின் மான் இளங் கன்றைக் குதலை மென்மொழிப் பேதையர் பச்சிளங்கொடிப் புல்லைப் பதும மென் கையால் நீட்டியே பரிவுடன் அழைக்கும் புதுமை கொண்டது பொத்தப்பி நாடு (சீ. 1.) அத்திருநாட்டுச் சிற்றூர்களில் தலைமை மேவியது உடுப்பூர் ஆகும். அங்குள்ள சிற்றில்களின் தூண்கள் சந்தனமரமே; வெண் கவரிமானின் வெண்கற்றையே மேல்வேயும் கூரை. (சீ. 2.) வேடர் மங்கையர் தமது முன்றிலிலே பூத்தவேங்கையின் ஆடுகொம்பரில் கட்டிய பூந்தொட்டியில் வளர்த்திப் பசுங்குழவியைத் தாலாட்டும் செவ்வழியின் பாடல் கேட்டு மலைப்பக்கத்தில் மாமயில் உறங்குவ. (சீ. 3.) இரும்பிற் செய்த தோளுடைய இறவுளர் விரும்பி வளர்க்கும் புலிகள் அவர்பின்னே போதலைக்கண்டு, இவ்வாறு பின்சென்றுதான் இளம்புலி வீரம் கற்கும் என அழகுபடக்கூறுகின்றார் அடிகள். இளம்பிடி இளம்பெண்கள் பின்சென்று அணிநடைகற்கும் என்கின்றார். (சீ. 4.) குன்றிச் செம்மணியாலாகிய அணிகளையுடைய குறத்திப் பெண்கள், குஞ்சர மத்தக முத்தமும், வேயிற்பன்றிக் கோட்டிடை வருமொளி முத்தமும் பரப்பி முன்றிலில் பற்பல சிற்றில்கள் செய்து விளையாடுவர். (சீ. 5.) சந்தனக்கால்மேல் கரிமருப்பினைப் பரப்பிவைத்த பரண்மேல் நின்று பைந்தினை கவர் பசுங்கிளியினங் கடியும் மடநல்லாரது இசை கேட்டலும், மேல் செலும் விச்சாதரர்கள், ஆடகநல் யாழ்தடவல் விட்டுச் செவித்துணை தாழ்ப்பர். (சீ. 6.)

இனைய பற்பல பெருவளம் எய்தும் அவ்வூரில், குறவர் தம் குஞ்சிதோய் கழற்கால் நாகன் என்னும் வேடர்க்கரசன், தத்தை என்பாளோடு வாழ்ந்தினிதிருந்தான். (சீ. 7.) மகவில்லாத தாழ்வினால் மனம் கவன்று தன் மனைவியோடின்னனம் எண்ணினான். (சீ. 8.) மக்களின் பெருமையைப்பற்றி வடமொழி நூல்களும் பண்டைத் தண்டமிழ் நூல்களும் சொல்லியவற்றைப் பிழிந்தெடுத்துக் காய்ச்சிக் கன்னற்கட்டியாக அடிகள் பாடுகின்றார்.

கண்ணில் யாக்கையும் திங்களில் கங்குலும் கண்போல்
அண்ணல் மந்திரி இல்லா சாட்சியும் அருளில்
திண்ணெ னெஞ்சமும் புலவரில் அவையும்ஒண் நீம்பால்
வண்ண வாயின மக்களில் வாழ்வும்ஒப் பாமால்.

சேற ளைந்தமென் சீறடித் தளிரொடு நீம்பாற்
சோற ளைந்தகைத் தாமரை யோடுசெந் துகிர்வாய்
ஊறு நீர்நனை மார்பினோ டிளமகார் உந்தி
ஏறும் இன்பமுன் னதனையே உடம்பென இசைப்பார்.

அரிகொள்பொன்புனை கிண்கிணி தண்டையோடணிந்த
தருண மென்றளிர்ச் சீறடித் தளர்நடைச் சிறுவர்
மருவ லூதசெவ் வாம்பல்வாய் மழலையா ரமுதம்
பருகி லாச்செவி பாவையின் செவியெனப் படுமால்

இம்மைஇன்பமொடு மறுமையின் இன்பமென் றிரண்டும்
அம்மென் மைந்தரை இல்லவர்க் கில்லை.

ஆதலின் எம்மை யாளுடை முருகவேள் அடிமலர் இறைஞ்சிச் செம்மை நன்மகற் பெறுகுவம் என எண்ணினான். (சீ. 9. 10. 11. 12.) செவ்வேள் எந்தை வாழ்வதற் கேற்றதோர் கோயில் கட்டிப் பூசனை நடத்தி, மயிலும் கோழியும் விடுத்தான். (சீ. 13.) பல பறையும் முழங்கத் திருவிழாச் செய்து, வேலனை அழைத்து வெறி யயர்களனை அழகு செய்து வெறியாடுவித்தான். (சீ. 14.) யாவரும் காண வேற்படைக்குரிசில் அவ்வேலன் மேற்றோன்றி "செய்த இச் சிறப்பினுக்கு உவந்தேம். படி. எலாம் புகழ் மகற் றருகுவம்" எனப் பகர்ந்து மறைந்தனன் (சீ. 15.) பகர்ந்த சொல்லமுதம் செவிகளால் பருகி, உவகைபூத்த நாகனும், மாமகிழ் வெய்தியதத்தையும், திருவடி மலர்மிசைவீழ்ந்து புகழ்ந்து நின்றனர். (சீ. 16.) வெறியாட்டாளனுக்குப் பெருஞ்சிறப்புச் செய்து சுற்றத் தொகைக்கெலாம் மனமகிழ வேண்டியன செய்தான். தளிர்த்துளம் இனிதிருந்தான். அன்னமன்னவளும் சின்னாளில் அரும் பெறற் கருப்பமுற்றாள். (சீ. 17.) கருப்ப மடைந்தவாறு உடல் வேறு பாட்டை எல்லாம் இரண்டு பாட்டில் கூறுகின்றார் அடிகள். கதையை வளர்த்திப் போகும் வகையில் இஃதொன்றாகும்.

உண்டுகொலென் னுமையம்ஒழிந்தது, மருங்கில்கோங்கின்
வண்டுறு முகுள மென்ன வனமுலை முகங்க றுத்த
பண்டுவ மைக்கு டைந்த பசியவேய்க் குலமு வப்பத்
துண்டவெண்மதி நுதற்குத்தோட்டுணைமெலிந்தவன்றே.

மகவுடன் வயிற்றி ருந்து வளர்புகழ் பரந்த தென்ன
மிகவுடல் விளர்த்த துண்டி வெறுப்புவந் ததுபு ளிங்கூழ்
அகனமர்ந் துண்ணும் வேட்கை அடைந்தது நடையோ
[ய்ந்தன்று
தகைமலர் மென்பூங் கோதை தான்பெருஞ் சுமையா
[யிற்றால்.

என்று இவ்வாறு வயா நோயினைக் கூறும் மருந்து நூலைப் பாட்டு நூலாக்கிப் பாடுகின்றார் அடிகள். இவ்வாறு வயா நோயுற்றவள், தம்குல மாசு துடைத்திடும் பொன்னினன்ன புதல்வனைப் பெற்றனள். (சீ. 20.) கானவர்க்கரசன் மகிழ்ச்சி யிருங்கடன் மூழ்கினான்; தத்தை எய்திய மகிழ்ச்சியை எடுத்துரைப்பார் யார்? (சீ 21) நாகன் பெருஞ்சிறப்பு வேற்படை ஐயனுக் காற்றினான். பெண்ணும் ஆணும் பெருமகிழ் வெய்தலால் எண்ணெயாட்டணி எங்கும் நிகழ்ந்தது. (சீ. 22.) பிள்ளை பிறந்ததும் நம்மவர் வீட்டில் எவை எவை நிகழுமோ

அவை எல்லாம் வேடரிடத்தும் நிகழ்ந்தனவாக அடிகள் கூறிச்செல்கின்றார். மணியினை மண்ணுறுத்தாங்கு வாசவான்புன லாட்டினர். பால்பெய்து நிலந்தேய்த்த அணிதிலகம் சிறுநுதலி லணிந்தனர். முலைப்பாலூட்டினர்; இணையில் கரிமருப்பின் இனிய வெழிற்றொட்டிலேற்றினர். (சீ. 23.) புனலாட்டிப் புனைந்தர, மணிமகனைத் தடக்கையால் தாங்கித் திண்ணென்றிருந்த தன்மையால் திண்ணனென்று திருநாமம் சாத்தினான் நாகன். (சீ. 24.) திண்ணனாது அழகினைச் சுருக்கித்திரட்டிக் கண்ணனைப்போன்றார் என அடிகள் அழகுபடக் கூறி நாயனார்மேல் கனிந்தொழுகும் அன்பின் மிகுதியால் பிள்ளைத்தமிழ் பாடுகின்றார். திருஞான சம்பந்தரை இவ்வாறு சேக்கிழார் பாடிப்போவது அடிகள் நினைவிற்கு வந்ததுபோலும்.

திண்வளரும் கரிமருப்பாற் செய்தசைபூந் தொட்டிலின்மேல்
விண்வளரும் புனிற்றுநிலாவெண்மதியின்வளர்மைந்தன்
தண்வளரும் பாலாழித் தரங்கமிசை நாகணையிற்றுயிலும்.
கண்வளரும் துழாயலங்கற் கதிர்மணிவண் ணனைப்போ
மலயமா ருதம்புகுந்த மடுக்கமல மெனநீரில்
கலைகெழுமா மதியமெனக் கவின்கொடிரு முகமசைய
இலவிதழ்வாய் அமுதொழுக எழின்மார்பமிசையெடுத்துச்
சிலைமறவர் குலதிலகம் செங்கீரை யாடிற்றே.

தருணமதி நிலத்தினிடைத் தவழ்வதெனத் தவழ்தந்து
பொருதிரைவார் கடலாடைப் புவிமகள்செய் புண்ணியத்தால்
திருவடிமாமலர்சுமப்பச்சேர்த் தினமென்நடைபயின்றான்
குருதிவடி இறங்கிலைவேற் குகனருளால் பெறுமைந்தன்
குன்றிவடம் அரைதயங்கக் கொடுவரிபி னுகிர்க்கோவை
கன்றுகழுத் தினிலிலங்க நனந்தலைச்சீ றார்முழுதும்
ஒன்றுசிறு ரொடுசிறுதேர் உருட்டியும்பே தையரிழைத்த
துன்றுமணிச் சிற்றில்லந் துடைத்தும் விளையாட்டயர்ந்தான்

ஆர்நாரின் திண்கயிற்றால் அமைச்சிறுகோல் வளைத்தவில்லும்
கூர்வாய்முள் நுனிபதித்த கோற்கோலும் கைக்கொண்டு
கார்மேனி மைந்தரொடு கான்புகுந்து கொடுவிலங்கின்
ஏர்வாய்மென் குருளைபல எய்தல்செய்தான் விளையாட்டால்

இளமான் கன்றுகளும் புலியின் கோமளநற் குருளைகளும் குடாவடியின் குட்டிகளும் தாமிழைத்த முற்றவத்தாற் சவரர் குலாதிபன் பயந்த மாமகனார் கைப்பட்டு வளர்ந்தவற்றிற் களவில்லை. (சீ. 30.) சேக்கிழாரும் "வளர்ப்பன எண்ணிலாத" என்கின்றார் அன்றே. இவ்வகைய விளையாட்டோடு இளமைந்தன் வளருநாளில் வில் பயிலும் நாள்வர, நாட்டு மறவரெலாம் அவ்வழி வந்துறக்கூட்டி, வில் விழா நடத்தினான் நாகன். (சீ.31.) பின்பு சிலையாசாற்குப் பெருஞ்சிறப்புச் செய்து தனது பழையகுடியை நிலைநிறுத்த வந்த இளையோற்குச் சிலைக்கல்வி அன்பினொடும் கற்பிக்க வேண்டுமென வேண்டிக்கொள்ள, அதற்கிசைந்த தொல்லாசிரியரும், நண்பகலில் வரன்முறையே நற்சிலை கைப்பிடிப்பித்தான். (சீ. 32.) முற்பிறப்பில் விற்றொழிலில் வல்லவரான திண்ணனாருக்குத் தொட்டுத்தான் காட்டவேண்டியிருந்தது. அஞ்சனம் விழியில்பொற்ப இட்டபொழுதே கீழ்ப்பொருள் வைப்புக் காண்பதுபோல எல்லாம் விளங்கினது. (சீ. 33.)

அடிகள், திண்ணனார் முற்பிறப்பில் அருச்சுனனாக விளங்கினார் என்பதை, மறக்கவில்லை. ஆனால் சேக்கிழாரோ அதனைக் கூறுகின்றிலர். முன்புசெய் தவத்தினீட்டம், என்றவர் கூறுகின்றதுகொண்டே அருச்சுனன் கதையைக் குறிக்கின்றார் என்று கொள்வதற்கில்லை. அவ்வாறே குறித்ததாக உடன்படினும் அவர் அதனை வெளிப்படையாக விளக்காமை அறியத்தக்கது. முன்னைய பிறப்பில் இன்னவனாக விளங்கினான் என்று அறிந்தபின்னர், பின்னைய பிறப்பில் வேடனாக இருந்தாலும் அவன் உயர்நிலை அடைவதில் ஒன்றும் அருமை காண இயலாது. அப்போது வேடர் பெருமானைத் தக்கவழியில் புகழ்தலும் இயலாது போய்விடும். இந்த உளவறிந்தவர் சேக்கிழார் பெருமான். அடிகளோ அருச்சுனனை மறக்கின்றிலர். அடிகளது தம்பியார் பின்னே இந்தப் புராணத்தை முடிக்கையில் கண்ணப்பரது முற்பிறப்பில் வரலாற்றினைக் கீழ்வருமாறு கூறுவார்.

"முன்னிய பகழிநீ கோடி மூன்" எனத்
தன்னிகர் சங்கரன் தான ளித்து "எமை
இன்னல்செய் வேடன்என் றிகழ்ந்து கூறினை
அன்னதால் வேட்டுவ அரச னாகியே

தென்றிசைக் கயிலையைச் சென்று சேர்ந்துநீ
குன்றலில் அன்புருக் கொண்டு நம்மயல்
நன்றிகொள் இலிங்கபூ சனைநற் பத்தியால்
ஒன்றையும் உணர்ந்திடாது உவந்து செய்தரோ

கோலமே முதலிய விலங்கு கொன்றுநீ
சாலவே தசையமுது அருந்திச் சாருநாள்
ஏலவே முத்தியும் ஈதும் போ" என
நீலமார் களத்திறை நீங்கி னனரோ

அன்னதன் மையின் அருச்சுனனும் வேடனாய்
முன்னவன் பூசனை முயன்று செய்துபின்
கன்னிபங் குடையகா ளத்தி நாதனார்
தன்னரு ளால்உயர் முத்தி சார்ந்தனன்.

இதுநிற்க. திண்ணனார்க்கு எல்லாம் விட்டகுறை தொட்டகுறைதான். கண்டவர்களும் இவர் விற்றிறத்தை நோக்கி "வெள்வயப் புரவித்திண்டோர் விசயன் வேட்டுவக் குலத்தினுள் அவதரித்தான் கொல்லோ" என்று ஐயம் கொண்டனர் (34.) விற்றொழிலில் திண்ணனார் மேம்படுதல் கண்டு நாகன் கன்னிவேட்டமாடுவித்தல் ஆற்ற விழைந்தனன். அதனை நன்கு கூட்டிட வனதெய்வங்கட்குப் பலிகொடுப்ப உன்னி வேடர் குழுவொடு வனத்திற் புக்கான். (35.)

விற்றொழில் கற்றதில் தீட்டிய அம்பைக் கூர்பார்க்க வேண்டிக் கன்னிவேட்டை யாடுவிக்க வேண்டினான், அடிகள் கண்ட நாகன். சேக்கிழாரோ, திண்ணனாரை நாகனது முதுமையில் பிறந்த பிள்ளையாகப் புனைந்துரைத்து, அவருக்குப் பதினாறு நிரம்புவதற்குள் நாகனுக்கு நரைதிரை மூப்பு மிகுதியாகவே வேட்டையாட வழியில்லாதவனாய்விடவே விலங்குகளால் புனங்கள் அழிவுண்டுபோதலும் வேடர்கள் வந்து முறையிட்டமையால், திண்ணனாரை அவ்வேடர்கட்கு அரசராக்கி வேட்டை வினைமேற் செலுத்தினான் என்று புகழ்கின்றார். திண்ணனார் முதுமையிற் பிறந்த பிள்ளையாய்ச் சீரும் செல்வமாக வளர்ந்ததனையும், நாகனது முதுமைக்கும் வேடரது சார்வற்ற நிலைக்கும் இரங்கி அரசப் பெருஞ்சுமையைத் தாங்க உடன்பட்ட ஈரத்தினையும், சுட்டிக்காட்டி அவ்வாறு செல்வத்திற் பிறந்து அரசராக உடன்பட்டு வேட்டைமேல் வந்தவர் இவ்வாறு எல்லாவற்றையும் உதறித்தள்ளிவிட்டுச் சிவன் வழிநின்ற அருமையினைப் பாராட்டுகின்றார். அடிகள் இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டிப் போகவேண்டிலர்போலும். வேறுவகையில் கதையைக் கூறிக்கொண்டு போகின்றார். அவ்வகையிலே அவரது கதைப் பகுதிகள் கதையோடு ஒன்றுபட்டு நில்லாமை நன்குபுலனாகின்றது. இது நிற்க.

இனி வேடரோடு சென்ற நாகன், புளிநர் யாரையும் வாட்கண்ணாரோடு ஒன்றுகூடிச் சென்று சுனைப்புனல் தோய்ந்து வருமாறு ஏவிவிட்டுத்தானும் நீராடப் போயினான். இதுவே தக்க விடம் என்று எண்ணி நீர் விளையாட்டுப்படலமும், பூக்கொய் படலமும் உண்டாட்டுப் படலமும் கூறிப்போகின்றார் அடிகள். நிற்க. அப் பூஞ்சுனையோ, இன்னும் அக்குறிய மாதவன் பருகினும் பருகும் என்றஞ்சிக் குரைகடல் வரையரண் புகுந்ததென வயங்குவது. அதிலே தெரிவையாரோடும் மறச்செல்வர் எய்தினார்கள். ஒலிவளைக் கையினார் உற்றபோது அவர்க்கஞ்சி இரிந்தோடும் பலவிதப் பறவையின் சிறகின்காற்றினால் சுனையில் பூத்தகுவளைகள் அசைதலானது அம்மாதரது கண்ணாகியபகைக்குஉடல்நனிநடுங்கல் போலும். (சீ. 38.) நீராடவந்த அம்மாதர் புகுந்தபோது வண்டிரிந் தோடுதல், அந்நீர்ச்சுனையில் அற்றை நாள் வரையும் புக்காடுவார்ப் பெறாது உற்ற நீள் பழி விடுத்தோடல் போலும். (சீ. 39.) சுனைக்குட் புகுந்தபோது செய்ய தாமரைத் தேமலர் அன்னலார் வாண்முகத்தோடு உறவாடின. மொய் அரும்புகள் வெய்ய கொங்கையை விருந்தெதிர் கொண்டன (சீ. 41.) சுனையில் உள்ள பொருள்களே உடலின் உறுப்பாகக்கொண்ட அப்பெண்கள் நீரைவிட்டகலாது அகனமர்ந்தாடினர் (சீ.41.) "இவ்வழி மூழ்கிவேறிடத்து எழுவேன் நீர் காண்க" எனத் தனதுதோழியரோடுசொல்லிமூழ்கி அவ்வகைஎழுந்தாள்; ஆனால் அவளது முகத்தைச் சைவலத் தருகுமலர்ந்த செங்கமலத் தனிமலர் என மனத்தெண்ணிய தோழியர் "எழுந்திலள்" என்று குளிர்புனற் பரப்பெல்லாம் பார்ப்பர். (சீ. 42.) முரிதிரைப் புனல் மூழ்கி எழுதருவாளது வாண்முகம், கடலின்கண் எழுதல்செய் வெண்மதி ஒத்தது (சீ, 43.) அன்னம் என்னவே தீம்புனல் ஆடிய கன்னலின் மொழியார் கரை ஏறினர்; பைந்தழைத்தா சுடுத்தார்கள். (சீ. 47) அங்கு நின்றகன்று, மங்குல் கண்படு மாமலர்ச் சோலையில் பொங்கும் ஓகையால் போய்க் கடவுட்கு நாண்மலர் கொய்யத் தொடங்கினார்கள். (சீ. 45.) தம்மை மஞ்ஞை என்றும், மென்குயில் என்றும் பூவை என்றும் கிளி என்றும் புகழ்ந்துரைத்தலை மெய்ப்பிக்கப் பூந்தருமீமிசை ஏறினார்கள். (சீ. 46.) கோங்கலர் கொய்வாள் கொம்பின் மறைந்து நிற்க, மற்றொருத்தி பூக்கொய்யப் புகுந்து, மறைந்து நின்றாளது பொங்குவெம்முலைப் பூமுகிழாமென அங்கை கொண்டு தொட்டு அன்மையின் வெள்கினாள். (சீ. 47.) குராவமரமே யன்றி வேங்கை மரமும் பாவைபூப் பூத்ததுபோலப் பெண்கள் எல்லாம் வேங்கை மரத்தின் மீது ஏறி நின்றனர். (சீ. 48) ஓராடவன் ஒரு மங்கையின் கையழகும் காலழகும் காணவேண்டி "மாது நீ செய்ய இச்சினைத் தேமலர் எட்டியே கொய்ய வல்லை கொல்" என்று கேட்டதும் அம்மாது கூசினாள் (சீ. 49.) ஒருநடை ஓவமன்னாள், உயர்சினைப் பூப்பெறத் தாவல் கண்டான் வீவில் ஆற்றல் ஓர்மீளி; கண்டு அதைத் தாழ்வித்தனன்; அவன் ஆவியன்னவள் ஆய்மலர் சிந்தினாள். (சீ 50.) இவ்வாறு இயற்கையழகுபடப் பாடிப்போதலில் அடிகள் வல்லவர் என்பதற்கு வேறொரு சான்றும் வேண்டுமோ? நிற்க. மாதர் தம் அடி வைத்தலினால் அசோகம் பல பூக்கள் பூத்து நிற்பதை அறியாது "ஈது அசோகம் நாம் ஏறியபின், மிகப்போது கொண்ட புதுமைதான் என்னே" என்று வியந்தனர். (சீ. 51.) கண்ணொடு மாறுகொண்ட வண்டினம், இப்பெண்களை இடம்பார்த்து வளைந்தெனச் சூழ்ந்துகொண்டன. (சீ. 52.) இவ்வாறு போது கொய்த புதுத்தளிர் மேனியார் தீது தீர்க்கும் அத்தெய்வ நிலயத்தைக் காதல் அன்பிற் கணவரோடு எய்தினார்கள். (சீ. 53.) மந்தாரசலமென வளர்ந்ததோளும் நந்து பேரிசையும் உடைய நாகனெனும் கிராதர்கோனும் கந்தமாருக் கடிமலர்ப் பைஞ்சுனை அந்தண் நீர் படிந்து அவ்வுழி எய்தினன் (சீ. 54.) வெருவரு தெய்வம்வாழும் வீழுடை விலங்குநீர் கோட்டு இருள்படத் தழைத்ததோர் ஆலமரத்தினை விரிமலர்த் தொடைகளாலும், விளங்குவெண் கவரியாலும் எழில்பெற அணிந்து, பூசை புரிபவனைக்கொண்டு பூசை புரிவித்தான். (சீ. 55.) கானகம் முழுதும் வாசம் கம்ழ்தரக் குங்குலியத்தின் நீல நறும்புகை எழுப்பினான். நாநெடுஞ் செவிய கோட்ட நண்ணிய திரிமருப்பின் ஊனமொன்றுமில்லா உயர்விடை பலவற்றை நெடுநிலங் குருதிபாயப் படுத்துப் பலிகொடுத்தான் (சீ. 56.) தேன், பழம் கிழங்கு, தொப்பி, செறி யமையரிசி அட்ட வான்பதம், தினையின்மா, ஐவனத்தின் வாலரிசி நன்மா, ஆன்பயம் பெய்தமைத்த பல்கி, இவற்றை எல்லாம் தேக்கிலையில் பெய்து தேவராளன் கான்பயில் கடவுட்கேற்றிக் களித்தனன். (சீ. 57.) அனைவரும் வனதெய்வம்பராய் வணங்கினர்; தேவராளன் முழுவிடைக்குருதி தோய்ந்து செந்நிறமுறு சேடையை அவர்கள் நெற்றியில் சாத்தினன். இவ்வாறு அடிகள் திருமுருகாற்றுப் படையைப் பின்பற்றி வழிபா டியற்றுமுறையைக் கூறுகின்றார். நிற்க. பின்னர் தெய்வமுண்ட அறுசுவை யுண்டி எல்லாம் உண்டுளங் களித்தார்கள்.

இனி உண்டாட்டுப்படலம்தொடங்குகிறது செங்கண் வேடரும் கருங்கணாரும் தசும்பினுள் நிறைத்துவைத்த வடிகொள்கள் தேறல் அங்கை மடக்கியே நிறைய வுண்டார்கள். உடை, நடை, சொற்கள் சோர ஒருவர்மேல் ஒருவர் வீழ்ந்தார்கள். (சீ. 59.) சிற்றிடை ஒருத்தி தேக்கிலையில் தேறலேந்தி, மற்றதன் அகம் தோன்றும் தன் மதிமுகம் நோக்கிஉண்டாள்; "கதிர் வெண்டிங்கள் கள்ளோடு என் வயிறு புக்குது; நிலவு நம்மூவர்க்கு இனியிலை ஈது உண்மை" என்றாள். (சீ. 60.) "பரிதிச் செல்வ, களிதருதேறல் உண்டு களித்தியேல், வெம்மையாறி வெண்ணிலாத் திங்கள்போலக் குளிர்கதிர் பெறுவை ஈவேன் கொள்க" என ஒருத்தி வானத்தியல் சுடரினை அழைத்து நின்றாள். (சீ. 61.) ஒருத்தி, தேம்பிழி மயக்கத்தினால் பிறனொருவனைத் தன் காதற் பிரிவரும் கொழுநனென்றே இறுகுறத்தழுவினாள்; அவனும் கள்ளினைப் பல புகழ்ந்தான். (சீ. 62) கற்பினைக் கடவுளாகக் காத்துப் போற்றும் நாட்டிற் பிறந்தும், காலத்தின் கொடுமையால் ஈதோர் அழகென உட்கொண்டு அடிகள் புனைந்துரைத்தமை அருவருக்கத் தக்கதேயாம். குடியால் வரும் குடிகேட்டைக் குறிப்பாலுணர்த்த இவ்வாறு கூறினர்போலும். அறவுரைகூற அறவணவடிகள் மறப்பதில்லையே. இது நிற்க. ஒருத்தி, தன் வாய்க்கடையே வழியும் நுரையில் மொய்க்கும் சுரும்பினை வளைகள் ஆர்ப்ப ஓச்சி "விரும்புநின் பெண்டிர்பால் போய் விம்ம வாய் பருகு" என்று ஊடி வரும் தலைமகனோடு ஊடி வைதல்போல் வைது நின்றாள். (சீ. 63.) ஒருமகன் களிப்பு மிகுதியினால் வஞ்சியங் கொடியினைத் தன் வணங்கிடையவள் என்று மயங்கி "உன் பூவாயைத் தேனொழுகலஞ்சி அணங்கு நீ திறந்திடாயேல் அளியனேன் உய்வனோ" என்று மனம் வருந்தினன், (சீ. 64.) இங்கு இரட்டுறமொழிந்து இன்சுவை யூட்டிய அடிகளின் பாவின் நயம் பாராட்டத்தக்கது. கள் மயக்கம் ஒழிந்தபின், பண்படுகிளவி நல்லார், தமது படர்

மூலை வடம் பிணங்கக், கண்கொளல் அருநுசுப்புக் கவன்றழ, நுதல் வியர்ப்ப விண்பொரு சினையாக ஆலின் வீழில் கட்டிய ஊசலைத் தமது கணவராட்ட, ஆடினூர்கள் பொரிமலரனைய புன்கமரத்தின் புதுநிழற் புளினந்தோறும், விரிகதிர்ச் செஞ்ஞாயிற்றின் வெயில்புகாப் பொதும்பர்தோறும், தருமிடை அடுக்கந்தோறும் தாமலர் நீள் அரங்கம் தோறும், வரிசிலை மறவர்கள் தம் செவ்வாய் மறத்தியாது போகமுண்டனர். மாமதி முகத்தினூர்கள், மீமிசை நின்றசைந்து விழுமணி அருவி பார்த்தும், காமரு மணிக்கழுத்துக் களிமயி லாடல் கண்டும். தேமலர் வனத்துலாயும், சிலம்பெதிர் கூய் அழைத்தும், தமது மகிழ்நரோடு ஆடினூர்கள். இன்னணம் எங்கும் ஆடி, எய்திய சிலைவல்லாரும், மின்னிடை அழுது இரங்க வீங்கிய குவவுக் கொங்கைப் பொன்னூர் தாமும், சூழ்ந்து போதர, வனத்தின் நீங்கித், தடக்கைமால் யானையன்ன நாகன், தனது உடுப்பூர் புக்கான்.

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

பாரஸீகப் புலவர்

உமார் கயாம்

என்பவர்தம்

உறுதிமொழி.

(930-ம் பக்கத் தொடர்ச்சி)

"அறிந்தேன், அறிந்தேன்! வந்ததும் போவதும் எங்கிருந்து எவ்விடம் என்றொரு நாளும் அறிதற்கியலாதென்பதை அறிந்து கொண்டேன்", என்று பாரஸீகப் பெரும்புலவர் உமார் தன் உளந்தேறி அமைதிபெற முயன்றாராலும், இதனோடு அவர்மனதில் உற்ற ஐயம் எவ்வாறு முடிவடையும்! ஆதலின் இவ்வுரை அன்னவர் தம் முடிவுரை யன்று. வாயால் புலம்புவதும் மற்றவரை உற்று வினவுவதும், மாந்தர்தம் அறிவின் சிறுமையை நினைத்து, அவருக்கு ஓய்ந்தபோதிலும் தீராத இச்சந்தேகம் திரும்பித் திரும்பி அவர் மனதைப் பீடித்துக் கொண்டே வந்தது. இந்நிலையில் என்செய்வார், பாவம் அவர். "நான், நெடிதாய்ந்து நைந்துழல என் மனதைக் கதுவிக் குடையும், ஏ! ஐயக் கிரீடமே, நீ மடிய மருந்தொன்று இவ்வுலகில் இல்லையென்றே எண்ணினாய்," என்று அயலிருந்த மதுவின் பாத்திரத்தையும் வள்ளத்தையும் பார்த்துத் தன் தலையசைத்து, எள்ளிய நகையோடு இவை இயம்புவார்:—

What, without asking, hither hurried *Whence*?
And without asking *Wither* hurried hence!
Another and another Cup to drown
The Memory of this Impertinence.

["எங்கிருந்தென்று வினவாமலா விரைந்திங்கு வந்தது? யாங்கென்று வினவாமலா விரைந்தகன்று ஏகுவது!......இவ்வடாத கேள்விகளின் நினைவை அறவே முழுக்கிவிட, இன்னொரு வள்ளம், இன்னுமொரு வள்ளம்."]

அறிய இயலாததை, நினைவினின்று அறவே ஒழித்திடல் முதுக்குறைவென்பது உண்மையாயினும் அல்லதாயினும், ஒன்றை அறிவதனினும் அருமையன்றோ அதன் நினைவை மனதிலிருந்து ஒளித்துவிடல். மதுவின் உதவியினால் ஆதலால் அதை மறக்க முயல்கின்றார் உமார். மதுவென்று இங்கு இவர் குறிப்பது, தலைசுழலத் தன்னினைவற்றதாக்கும் கள்ளேயோ, அல்லது அதனைப் போல் இறப்பும் எதிர்வும் எண்ணாமல் நிகழ்விலே உணர்வை அமிழ்த்துவிடும் சாதனங்களுக்கு அது ஆகுபெயராய் வந்திருக்கின்றதோ வென்று சங்கையறச் சொல்வதற் கியலவில்லை. இது எவ்வாறாயினும் நினைத்தறிய முயல்வதனினும் அந்நினைவையே துறப்பது தக்கதென ஓர்ந்த உமார் பின்னுங் கூறுவார்:—

Ah! my beloved, fill the Cup that clears
Today of past Regrets and future Fears-
To-morrow?—Why, to-morrow I may be
Myself with Yesterdays' Seven Thousand Years.

[" அம்ம! என்னரும் இனியாய், இன்றைய நினைவிலிருந்து, சென்றநாள் துயரங்களும், எதிர்வரும் பயங்களும் தோன்றாது தெளியவைக்கும் அவ்வள்ளத்தை வழிய வழிய நிரப்புவாய். நாளையோ என்பாயேல்?—நாளையைப்பற்றி யென்! நாளை நாளையென்பதெல்லாம் எனக்கு நேற்றோடு சேர்ந்து ஆண்டுமோ ரேழாயிரம் கழிந்த வாகலாம்"]

இது, கையறு நிலையில் பிறக்கின்ற வோர் ஊக்கம். பாழாய்க் கழிந்த பகலெல்லாம் எண்ணி எண்ணி மனிதன் அழிவானேன்! நேற்று நேற்றென்று நெடிது நினைந்திரங்குவதுதான் வாழ்வாமோ! நினையாத பயம் ஒன்று நாளை வந்து நேருமோவென்று அஞ்சியஞ்சி நிற்கவோ நீ பிறந்தாய். பின்னோக்கிக் கலுழ்வதும் முன்னோக்கிக் கலங்குவதும் என்னும் இவை யிரண்டுதானோ கண்ணுற் கண்டபயன்! "இல்லை இல்லை" என உரைக்க முயல்கின்றார் உமார். "நாளை, நாளை, என்று நாளையில் பற்றுவைத்து உழலும் மனமே, கேள். நாளையின் செய்தி அறிவாயோ, நீ! நாளையும் நேற்றாகி ஊழிபல கழியாவோ? நேற்றின் துயரத்தையும் நாளைப் பயத்தையும் ஒருங்கே கழுவும் மதுவை, மனமே நானுனக் களிக்கின்றேன். அதனைப்பருகி நீ பரிவு தீர்ந்திரு" என்று தன் மனதிற்கு அமைதி கூறுகின்றார். கூறித் தன்கொள்கையைப் பின்னும் இன்னவாறு காட்டுவார்:—

A Book of Verses underneath the Bough
A Jug of Wine, a loaf of Bread—and thou
Beside me singing in the Wilderness—
Ah! Wilderness were Paradise enow!

["காட்டினிலோர் கிளைநிழலமர்ந்து, பாடற் புத்தகமொன்று, நறவின் சாடியொன்று, உண்ணும் பண்டமொன்று, நல்லாய், நீயும் என்னருகில் இன்னிசை பயின்றிருக்க, ஆகா! துறக்கத்திற்கு இத்தூறே போதும்"]

இங்கு வைத்த நறவின் சாடியும், சென்றது கருதாமல் நாளைச் சேர்வதும் நினையாமல் அமைகின்ற மனநிலையைக் குறிப்பதற்கே யாகும். அந்நிலையை முயற்சியால் ஒரு சிறிது பெற்றபின் மீண்டும் அம்மனம் ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்றி அலையாமல் கிடப்பதற்குச் சாதனங்கள் எவையெனில், தீஞ்சொற் காவியங்களும், பசிவந்து உழக்காமலிருப்பதற்குப் போதுமான உணவும். கொடுப்போர் ஏற்போர் இருவோர்க்கும் ஒருங்கே இன்ப மளிக்கும் அன்பிற்கு வைப்பாய காதலரும், இன்னிசைப் பாடல்களும்ஆகும், என்று எண்ணினார் இப்பெருமைமிகு பாரஸீகக் கவிவரர். பசிவந்து உழக்காமற் காப்பதற்கு வேண்டிய உணவிற்குஅதிகமாக ஒருவன்கருத்துச் செல்லுமாயின் உயரிய நோக்கமேனும் வாழ்வேனும் அவன்பால் தோன்றமாட்டா. உணவென்பது இங்கு உடலோடு கூடி உயிர் நிற்பதற்கு இன்றியமையாப் பொருள்களைக் குறித்தவொரு சாதிப்பெயராய் வந்துளது. கண்ணிற்குத் தன்னுருவத்தாலும் காதிற்குத் தன் தீங்குரல் இசையினாலும் அழகென்னும் தத்துவ அமுதை எடுத்தெடுத்து விருந்தளிக்கக் காதலியை அருகே அமர்த்திக் கொள்வதோடு, அன்பினால் வரும் இன்பத்திற்கும் உமார் ஆதாரம் செய்துகொண்டார். கண்ணாலும் காதாலும் அழகிற்குத் தான் ஆளாவதன்றியும் கருத்தாலும் அவ்வழகை நேரே துய்த்துயரக் காவியம் ஒன்றும் கைவிட்டகலாமல் வைத்துளார். ஆதலால் மறதிஎன்னும் மதுவால் முன்னும் பின்னும் நினையாமல், உயிரிற்குவேண்டியதற்கு இன்றியமையாத உணவைமாத்திரந் தேடிக்கொண்டு மற்றப்போதெல்லாம் கலையினதழகிலும் அன்பினதமைதியிலும் உற்று வாழ்வதே வாழ்க்கையென விளக்குகின்றார். "காலமும் இடமும் எவையே யாயினும் இன்னபடி இருப்போரெல்லாம் இருக்குமிடத்திலே துறக்கம் பெற்றவராகின்றனர். அறிவென்றும் ஆராய்ச்சியென்றும் முடிவிலாமுடிவு காண அல்லலுற வேண்டா. இதுவென்றும் அதுவென்றும் இவ்வாராய்ச்சிகள் எல்லாம் பின்னு முன்னும் சொல்லால் முழக்கும், சுகமில்லை. எவ்வழிச் சென்றாயோ அவ்வழியே உனதுஐயமும் நீயுமாய்த் திரும்பிவருவதல்லாது வேறொன்றும் வாய்த்திடாது. அழகுண்டு எங்கெங்கும், அன்புமுண்டு. வேண்டு மெனாமுன் வந்தெய்தும் இவைகளை விட்டுவிட்டு எய்தற்கருமையாய செல்வத் தொகுதியையும் புகழின் இரைச்சலையும், அறிவின் முடிவையும் பெறுதற்குப் பாடு படுவானேன். அவையெலாம் அறவே விடுத்து அழகிலும் அன்பிலும் உன் அமைதியைத் தேடிக்கொள்" என்று உமார் கயாம் நம் மனோர்க்கு நல்லுரை அளிக்கின்றார்.

இவ்விடயங்களை மனதிற்கொண்டு சிந்திக்குங்காலையில் முன் அவர், "இம்மையிற் பெற்றதொரு செல்வத்தின் ஆட்சியே, இனிது இனிது" என்று எண்ணுவார் சிலர். சிலர், 'வானாடு வழங்கவரும் பாக்கியமே, பாக்கியம்' என்பர். செ! இவ்விருதிறத்தோர் கிடக்க, இருக்கின்ற பணத்தைக் கையிலே எடுத்துக்கொள். மற்றவெல்லாம் விட்டுவிடு. ஐய, சேணிடை யொலிக்கும் முரசின் பெருமித இசையினால் யாருக்கென்!" என்று செப்பிய கருத்தின் திறம் நன்கு விளங்கும். பணம் (Cash) என்பது கையில் இருக்கும் பொருள். இனி ஈட்டவேண்டியதன்று. இச்சொல், ரூபா-அணா-பையை இங்குக் குறிக்கவில்லை. "இந்த வேளையில் உன் சுய உரிமையால் உன் உடைமையாய் இருப்பவை" என்பது இதன்பொருள். அழகும் அன்பும் யாவருக்கும் எங்கும் எந்நிமிடத்திலும் உரிமை, உடைமை யாக்கிக்கொள்ளத் தக்கவை. அவைகளை எடுத்துக்கொள், மற்றவெல்லாம் விட்டுவிடு என்றது, இம்மையின் இனிமை உளதோ இலதோ என்றும், மறுமைப்பேறு மெய்யோ மாயமோ என்றும், இன்ன பிறவற்றைப் பற்றி முயல்வதும் சிந்திப்பதும் ஆகிய கருமங்களைக் குறித்ததாம். "வீரமிங்குளது, வெற்றி இங்குளது, புகழிங்குளது; வம்மின்" என அழைப்பதுபோல் தூரத்தில் ஒலிக்கும் முரசின் இசை, இன்று ஒருவன் தனது உடைமையாய் இருப்பனவற்றை அநுபவிப்பதை விட்டுப் பின்னாள் ஏதோ பெரும்பேறு பெறலாகும் என்ற எண்ணத்தால் மறுநாளை நினைத்து ஒருநாளும் வாழாது உயிரை உய்க்கும் சபலத்தைக் குறிக்கின்றது. "அதனால் யாருக்கென்!" என்று கழித்துவிட்டார் உமார்.

அழகும் அன்பும் எப்படி ஒவ்வொருவருக்கும் கைப்பணமா யிருக்கின்றனவோ அப்படியே அவ்வவருக்கு வேண்டிய உணவும் இருக்கின்றது. கனல்வாதை வந்தெய்திய காலையில் அள்ளிப்புசிக்க ஆகாரம் யாவருக்கும் எளிதில் கிடைக்கும். அதனைமாத்திரம் பெறுவது யாவருக்கும் அருமையன்று. காலைமுதல் மாலைவரை உண்ணுதற்குப் பொருள் ஈட்டும் நெறியில் பொழுதெல்லாம் போகவேண்டா. உணவன்றிப் பின்னும் பலபலவேண்டி வேண்டி அத்துணைக்கும் ஈடான பொருள் ஈட்டுமாறு சிந்தித் தலைவதாற்றான் பெரும்பான்மை வயிற்றுச் சோறுமே அரிதாகி விடுகின்றது. "வயிறே நாளைக்கு நீ என் செய்வாய்," என வருந்தல் வீண் பயம். ஆதலின் உணவிற்கு என்செய்வோம் என்னும் கவலையிலும் முயற்சியிலும் ஒருவன், தன் கையிருக்கும் பணமாகிய அழகையும் அன்பையும் எடுத்துக்கொண்டு மற்றவெல்லாம் மறக்கின்ற மனப்பான்மை, இடையூறு அடையவேண்டுமென்பதில்லை.

"சென்றது கருதார், நாளைச் சேர்வது நினையார்." யார்? "பிரதிவ்யாம் அன்ன பூர்ணாயாம் வயம்அன்னஸ்ய காங்க்ஷின:" (உலகமே அன்னமயமா யிருக்கின்றபோது எமக்கு உணவிற்கு என்னகுறை) என்று சிந்தையற விளம்புவார் யாவர்? தூறும் துறக்கமாதல் யாவர்க்கு? ......'துறந்தார்' என்னும் விடை இவ்வினாக்களுக்கு எளிதில் பெறலாம். ஆதலாற்றான், உமார்கயாமின் முதல் சொற்கள் லோகாயதப் பிதற்றல்போல் தோன்றினாலும் உண்மையில் துறவுநிலையைத் தூண்டுகின்றனவென்று இயம்பினோம். மது அருந்தினவரைப்போல் தன்னை மறந்த மனநிலையும், அந்நிலை அகலாமற் காக்க அழகும் அன்பும் கைக்கொண்டு வேறெல்லாம் வீண் என்று விளம்பிவிட்டார்.

K. இராஜகோபாலன்.

முற்றிற்று.

[குறிப்பு: —"For every thirsty bee that is born is born a honey-hiding rose" (தாகத்தோடு பிறக்கின்ற ஒவ்வொரு வண்டிற்கும், தேன் பொதிந்த மலரொன்றும் பிறக்கலாகின்றது) என்று ஹிரேந்திரநாத் சட்டோபாத்யாயா, பாடியிருப்பதும் வேண்டியது உணவேயாயின் உலகத்தில் குறையில்லை என்னுங் கருத்தை இனிமையாகக் காட்டுகின்றது—Ed·]

தமிழ்ப் பாடம் 48.

நள வெண்பா

(934-வது பக்கத் தொடர்ச்சி)

கலிதொடர் காண்டம்.

ஆருயிரு நானு மழியாம லேயாவிப்
பேரரவின் வாயிற் பிழைப்பித்தாய்—தேரில்
இதற்குண்டோ கைம்மா றெனவுரைத்தாள் வென்றி
விதர்ப்பன்றான் பெற்ற விளக்கு. 126.

பொழிப்புரை:—வெற்றிபொருந்திய விதர்ப்பராஜன் தன் குலத்தை விளங்கவைப்பதற்குப் பெற்றவொரு விளக்குப் போன்றவளாகிய தமயந்தி, "ஐயா, எனது உயிரும் நானும் அழியாமல் இப்பெரிய பாம்பின் வாயிலிருந்து என்னைக் காப்பாற்றினாய். யோசிக்குமளவில் இதற்குத் தக்கபடி யான் செய்யக்கூடிய கைம்மாறுயாது இருக்கின்றது," என்று வேடனைப்பார்த்துக் கூறினாள்.

இந்து நுதலி யெழினோக்கி யேதோதன்
சிந்தை கருதிச் சிலைவேடன்—பைந்தொடிநீ
போதுவா யென்னுடனே யென்றான் புலைநரகுக்
கேதுவாய் நின்றான் எடுத்து. 127.

பதப்பிரிவு:—இந்து நுதலி எழில் நோக்கி ஏதோ தன் சிந்தை கருதி சிலை வேடன் பை தொடி நீ போதுவாய் என் உடனே என்றான் புலை நரகுக்கு ஏதுவாய் நின்றான் எடுத்து.

அன்வயம்:—புலை.நரகுக்கு ஏதுவாய் நின்றான் சிலை வேடன், இந்து நுதலி எழில்நோக்கி ஏதோ தன்சிந்தை கருதி, எடுத்து'பைந்தொடி நீஎன்னுடனே போதுவாய்' என்றான்.

பதவுரை.

புலை - அற்பமாகிய
நரகுக்கு - நரகத்திற்கு
ஏதுவாய் - காரணமாகிய பாவத்தினிடத்தில்
நின்றான் - நின்றவனாகிய
சிலை - வில்லை உடைய
வேடன் - வேடன்,
இந்து - சந்திரன்போன்ற
நுதலி - நெற்றியை உடையவளாகிய தமயந்தியின்
எழில் - அழகை
நோக்கி - பார்த்து,
ஏதோ - எதனையோ
தன் - தன்னுடைய
சிந்தை - மனதில்
கருதி - எண்ணங்கொண்டு,
எடுத்து - அவளைப்பார்த்து,
" பை - பசுமையான பொன்னாற்செய்த
தொடி - வளையல்களை அணிந்தவளே,
நீ - நீ
என்னுடனே - என்னோடு
போதுவாய் - வரக்கடவாய்"
என்றான் - என்று கூறினான்.

விரிவுரை:—'புலைநரகுக்கு ஏதுவாய் நின்றான்' என்னும் இவ்வாக்கியத்தில் வாய், என்பது 'இடம்' என்னும் பொருளில் வந்திருக்கின்றது. வீட்டின்வாய், காட்டின் வாய் என்பனபோல். நரகத்திற்குக் காரணத்தினிடத்தில் நின்றான், என்பதை, நரகத்திற்குக் காரணமான பாவத்தைச்செய்ய நிற்பவன், என்று பொருள்படுத்திக் கொள்ளவேண்டும்.

குறிப்பு:—முதல் வேற்றுமையில் இருக்கின்ற சொற்கள் செய்பவனைக் காட்டும். அச்சொல் இரண்டாம் வேற்றுமையை அடையும்போது செய்யப்படும் பொருளையும் காரியத்தையும் காட்டுதற்கு உரியதாய் மாறும் மூன்றாம் வேற்றுமைக்குச் சிறப்பான பொருள் கருவி. அப்பொருள் அல்லது காரியம் எதனைக்கொண்டு செய்யப்பட்டது என்பதைக் காட்ட வேண்டியபோது அச்சொல் மூன்றாம் வேற்றுமையாக மாறுகின்றது. கர்த்தாப் பொருளும் மூன்றாம்வேற்றுமைக்கு உண்டாயினும் அவ்வேற்றுமையின் உதவியில்லாமலே கர்த்தாவைக் காட்டக்கூடு மாதலால் கருவி அல்லது காரணம் என்னும் பொருளே மூன்றாம் வேற்றுமைக்கு முதலும் முக்கியமுமான பொருள். 'தச்சன் இப்பெட்டியைச் செய்தான்,' என்னுங்கால் செய்வதாகிய காரியத்திற்குக் கர்த்தா, தச்சன். அத் தச்சன் என்னுஞ்சொல் முதல் வேற்றுமையில் இருக்கின்றது. இப்பெட்டி தச்சனால் செய்யப்பட்டது, என்னும்போது அதே கர்த்தாவை மூன்றாம் வேற்றுமை காட்டுவதாகின்றது. அவ்விதமே ஒடு ஓடு என்னும் மூன்றாம் வேற்றுமை உருபுகள் காட்டுகின்ற உடன் நிகழ்ச்சிப் பொருளையும் அவ்வுருபுகளின் உதவி இல்லாமல் பெறக்கூடும். இராமனோடு கிருஷ்ணனும் வந்தான், என்றாலும் இராமனும் கிருஷ்ணனும் ஒன்றாக வந்தனர், என்றாலும் ஒரே கருத்துத்தான். ஆதலால் மூன்றாம் வேற்றுமை அடையாமலுங்கூடச் சொற்கள் கர்த்தா உடனிகழ்ச்சி என்னும் இருபொருளும் பெறும்படி நடக்க இயலும். ஆகையால்தான் மூன்றாம் வேற்றுமைக்கே சிறப்பாய பொருள் கருவிப்பொருள் என்று கூறினோம்.

இனி, நான்காவது வேற்றுமையைப் பார்ப்போம். இதன் உருபு கு என்பது ஒன்றே. இந்தக் கு உருபுவந்து ஒருசொல்லை ஏழுவித பொருள்களில் மாற்றும். அவை, கொடை பகை நேர்ச்சி தகுதி அதுவாதல் பொருட்டு முறை என்பன. இவைகளல்லாமல் இன்னும் சில பொருள்களில் நான்காம் வேற்றுமை வரக்கூடுமானாலும் பெரும்பான்மை இவ்வேழு பொருள்களிலேயே அது வருவதால் இலக்கண நூல்களில் இவைகளையே நான்காம் வேற்றுமையின் பொருள்களென்று வரைந்துள்ளார்:—

ஏழைகளுக்குப் பிச்சை யிட்டான் ஆசிரியன் மாணவர்க்கு அறிவு அளித்தான்	கொடை
தலைவலிக்கு இது நல்ல மருந்து பாம்பிற்குக் கீரி வளர்த்தான்	பகை
கண்ணுக்கு மை. பூவிற்கு மணம்.	நேர்ச்சி
மந்திரிக்கு அழகு வரும்பொருள் உரைத்தல் குலத்திற்குப் பெருமை கொடை	தகுதி
குடத்திற்கு மண் கொணர்ந்தான் தாலிக்குப் பொன் கொடுத்தான்	அதுவாதல்

ஒன்றே மற்றொன்றாகத் திரிவதைக் காட்டுவதால் இப்பொருளை அது ஆதல் என்றழைப்பர்.

கூலிக்கு வேலை செய்தான் சுவைக்குச் சர்க்கரை போட்டான்	பொருட்டு
இராமனுக்கு இவன் மகன் கிருஷ்ணனுக்கு மனைவி அவள்	முறைஅல்லதுஉறவு

இங்குக்குறித்த ஏழு பொருள்களில் அடங்காத வேறு [illegible] க்கூடும்.

இந்தச் செய்யுளில் 'நரகுக்கு ஏதுவாய் நின்றான்' என்னும் வாக்கியத்திலுள்ள நரகுக்கு என்னுஞ் சொல் நான்காம் வேற்றுமையில் இருக்கின்றது. இப்பாவம் செய்வதால் அவ்வேடன் நரகத்திற்குப்போகும்பொருட்டு நிற்கின்றான் என்பது கருத்தாதலால், நரகுக்கு என்பது நான்காம் வேற்றுமை, 'பொருட்டு' என்னும் பொருளில் வந்திருக்கின்றது.

மற்ற வேற்றுமைகளைப் போலவே நான்காம் வேற்றுமை உருபாகிய கு என்பது விரிந்தும் இருக்கலாம், மறைந்தும் இருக்கலாம். 'பாண்டவர் மனைவி பாஞ்சாலி' என்றக்கால், 'பாண்டவர்' என்பது முறை அல்லது உறவு என்னும் பொருளுடைய நான்காம் வேற்றுமைச் சொல், ஆனால், கு என்னும் உருபு இல்லை. ஆகையால் நான்காம் வேற்றுமைத் தொகை. விரிந்தால், 'பாண்டவர்க்கு மனைவி பாஞ்சாலி' என விரியும்.

உ இன் அத்து முதலிய இடைச் சொற்களுக்குச் சாரியைகள் எனப் பெயரென்றும், இவைகள் வேற்றுமை உருபுகளைப் பெயர்ச் சொற்களோடு சேர்த்துவைப்பதற்கு உதவியாய் வருமென்றும் முன்னே (706 வது பக்கம்) சிறிது கூறி இருக்கின்றோம். மற்ற வேற்றுமைகளைப் போலவே இந்தக் கு உருபும் சாரியை பெற்றும் வரலாம், பெறாமலும் வரலாம். அல்லது இரண்டு மூன்று சாரியைகளை ஒரே சமயத்தில் பெற்று வருதலும் கூடும். கிளிக்கு நாய்க்கு தலைக்கு, என்னும் உதாரணங்களில் கிளி+கு, நாய்+கு, தலை+கு, என்று கு உருபு சாரியை ஒன்றும் பெறாமல் நேராகச் சொல்லோடு சேர்ந்திருக்கின்றது.

பாலுக்கு, கண்ணுக்கு, அவனுக்கு என்னும் உதாரணங்களில், பால்+உ+கு, கண்+உ+கு, அவன்+உ+கு, என்று உ என்னும் சாரியை வந்திருக்கின்றது.

பெண்ணிற்கு, காலிற்கு பொன்னிற்கு, என்னும் உதாரணங்களில், பெண்+இன்+கு, கால்+இன்+கு, பொன்+இன்+கு, என்று இன் என்னும் சாரியை வந்திருக்கின்றது.

மரத்துக்கு, முகத்துக்கு, நகரத்துக்கு, என்னும் உதாரணங்களில், மரம்+அத்து+கு, முகம்+அத்து+கு, நகரம் + அத்து+கு, என்று அத்துச் சாரியை வந்திருக்கின்றது.

பெண்ணினுக்கு, காலினுக்கு, பொன்னினுக்கு, என்னும் உதாரணங்களில், பெண்+இன்+உ+கு, கால்+இன்+உ+கு, பொன்+இன்+உ+கு, என்று இன் உ என்னும் இரண்டு சாரியைகள் வந்திருக்கின்றன.

மரத்திற்கு, முகத்திற்கு, நகரத்திற்கு, என்னும் உதாரணங்களில், மரம்+அத்து+இன்+கு, முகம்+அத்து+இன்+கு, நகரம்+அத்து+இன்+கு, என்று, அத்து, இன் என்னும் இரண்டு சாரியைகள் வந்திருக்கின்றன.

மரத்தினுக்கு, முகத்தினுக்கு, நகரத்தினுக்கு,என்னும் உதாரணங்களில், மரம் + அத்து + இன் + உ + கு, முகம்+அத்து+இன்+உ+கு, நகரம் + அத்து + இன்+உ+கு, என்று அத்து, இன், உ, என்னும் மூன்று சாரியைகள் வந்திருக்கின்றன.

இனி, கு என்னும் எழுத்தில் முடிவதெல்லாம் நான்காம் வேற்றுமைச் சொற்கள் என்று எண்ணப்படாது. பாக்கு, நாக்கு, படகு, என்பனபோன்ற சொற்கள் கு என்னும் எழுத்தைக் கடைசியில் பெற்றிருந்தாலும் நான்காம் வேற்றுமைச் சொற்களல்ல. சொல்லின் உருவமே அது. இவை நான்காம் வேற்றுமை அடைய வேண்டுமானால் பாக்குக்கு, நாக்குக்கு, படகுக்கு, என்று ஆக வேண்டும்.

வேட னழைப்ப விழிபதைத்து வெய்துயிரா
ஆடன் மயில்போ லலமரா—ஓடினாள்
தூறெலா மாகச் சுரிகுழல்வேற் கண்ணினீர்
ஆறெலா மாக வழுது. 128.

பதப்பிரிவு:—வேடன் அழைப்ப விழி பதைத்து வெய்து உயிரா ஆடல் மயில்போல் அலமரா ஓடினாள் தூறு எலாம் ஆக சுரி குழல் வேல் கண்ணின் நீர் ஆறு எலாம் ஆக அழுது.

அன்வயம்:—வேடன் அழைப்ப, விழி பதைத்து, வெய்து உயிரா, ஆடல் மயில்போல் அலமரா, அழுது, வேல் கண்ணின் நீர் ஆறு எலாம் ஆக, சுரிகுழல் தூறு எலாம் ஆக ஓடினாள்.

பதவுரை.

வேடன் - வேடன்
அழைப்ப - அவ்வாறு அழைக்க, (தமயந்தி)
விழி - கண்கள்
பதைத்து - துடித்து,
வெய்து - வெப்பமாக
உயிரா - பெருமூச்சு விட்டு
ஆடல் - நர்த்தனம் செய்கின்ற
மயில்போல் - மயிலைப்போல்
அலமரா - சுழன்று,
அழுது - அழுதுகொண்டே
ஆறுஎலாம் - வழியெலாம்
கண்ணின் - கண்களிலிருந்து
நீர் - (வழிந்த) நீர்
ஆக - ஆகவும்,
சுரி - சுருண்ட
குழல் - கூந்தலானது
தூறு எலாம் - புதர்களி லெல்லாம்
ஆக - சிக்கிக்கொள்ளவும்
ஓடினான் - ஓடினாள்.

விரிவுரை:—பாம்பின் வாயிலிருந்து உயிர்தப்பிய தனக்கு இவ்வாறு மானக்குறை வருவதோ எனத் தமயந்தி அலமந்து வேடனைவிட்டுத் தப்பி ஓடமுயன்றாள். அப்பொழுது அவள் கூந்தல் புதர்களில் சிக்கிப் பிய்ப்புண்டு போயிற்று.

குறிப்பு:—'கண்ணின்நீர்' என்று இங்கு வந்திருக்குமிடத்தில் கண்ணின் என்னும் சொல் ஐந்தாம் வேற்றுமையில் இருக்கின்றது. இவ்வேற்றுமையின் உருபுகள் இல் இன் என்னும் இரண்டு. இந்த இன் வேறு, சாரியையாக வருகின்ற இன் வேறு. இதற்கும் அதற்கும் உருவம் ஒன்றாயிருந்தாலும் இதுவேறு அதுவேறு.

ஐந்தாம் வேற்றுமை, ஒன்றிற்கும் மற்றொன்றிற்கும் என்ன சம்பந்தம் என்பதைக் காட்டவரும். அந்தச் சம்பந்தம் ஒன்றைவிட்டு ஒன்று நீங்குவதால் ஏற்படலாம்; அல்லாது ஒன்றைப்போல் ஒன்று இருப்பதால் ஏற்படலாம்; அல்லது ஒன்றினிற்கு ஒன்று எல்லையாயிருப்பதால் ஏற்படலாம்; அல்லது ஒன்றினிற்கு ஒன்று காரணமாயிருப்பதால் ஏற்படலாம். ஆகையால் ஐந்தாம் வேற்றுமைக்கு, நீங்கல் ஒப்பு எல்லை ஏது, என நான்கு பொருள்கள் இருக்கின்றன. அதாவது இல் என்னும் உருபாவது இன் என்னும் உருபாவது ஒரு சொல்லோடு சேர்ந்து அந்தச் சொல்லை மேற்சொன்ன நான்கு பொருள்களில் ஒன்று குறிக்கும்படி செய்யும்:—

புண்ணில் வழிந்த இரத்தம் கையின் அகன்ற பொருள்	நீங்கல்.

சாதாரண வழக்கத்தில் இந்த நீங்கல் பொருளேக் காட்ட, இருந்து நின்று, என்னும் சொற்களேச் சேர்த்துச் சொல்லுவார். புண்ணிலிருந்து வழிந்த இரத்தம், அல்லது கைநின்று அகன்றபொருள், என்னும் போதும் இல் இன், என்னும் உருபுகள் இல்லாமற்போனுலும் அச்சொற்கள் ஐந்தாம் வேற்றுமையே அடைந்திருக்கின்றன.

மதியின் குளிர்ந்த முகத்தாள்
அரியின் எதிர்த்துப் பொருதான் } ஒப்பு.

மதியைப்போல் குளிர்ந்த முகத்தையுடையவள்: சிங்கத்தைப்போல் எதிர்த்துச் சண்டைசெய்தான், என்னும் பொருள் தருவதால் இவை ஒப்பப்பொருளன. ஆனுல் ஒன்றிற்கு ஒன்று நேராக ஒப்புஎன்னுது ஒன்றைவிட ஒன்று அதிகம் அல்லது குறைவு என்ற குறிப்பு இருக்குமாயின், அப்பொழுது ஒப்புப்பொருள் என்னப்படாது. மன்னனின் பெரியவர் புலவர், நாயின் இழிந்தவர் உலோபிகள், என வரும்போது மன்னனேவிடப் புலவர் பெரியவர் என்றும், நாயைக்காட்டிலும் உலோபிகள் தாழ்ந்தவர்கள் என்றும் பொருள் தோன்றுவதால் இவை ஒப்புப்பொருளில் வந்தனவல்ல. பெருமையிலும் சிறுமையிலும் ஒருவரைவிட்டு ஒருவர் நீங்குகின்றனர் என்பதையே காட்டுவதால், இப்படி வருவனவற்றை நீங்கல் பொருளோடுதான் சேர்த்துக்கொள்ள வேண்டும். வழக்கத்தில் மன்னனினும் பெரியவர் புலவர் என்று உயர்வுச்சிறப்பும்மையும், நாயினும் இழிந்தவர் உலோபிகள் என்று இழிவு சிறப்பும்மையும் சேர்த்துப் பேசுவார்.

சென்னேயின் வடக்கு நெல்லூர்
பாவத்தின் முடிவு பாழ்நரகம் } எல்லே.

இப்பொருளிற்கு, சென்னேக்கு வடக்கு நெல்லூர், பாவத்தின் து முடிவு பாழ்நரகம், என, நான்காம் வேற்றுமை உருபும் வழங்குவதுண்டு.

ஈகையின் உயர்ந்த மாந்தர்
கல்வியில் பெரியவன் கம்பன் } ஏது.

உயர்விற்கும் பெருமைக்கும் ஏது அல்லது காரணமாயிருப்பன ஈகை கல்வி என்னும் இவைகள் என்று காட்டுவதால் இங்கு, இன் இல் என்னும் உருபுகள் ஐந்தாம் வேற்றுமையாக அவைசேர்ந்துள சொற்களே மாற்றின. ஆனுல் ஏதுப்பொருள் மூன்ரும் வேற்றுமைக்கே சிறப்பாகும். வழக்கத்தில், ஈகையினுல் உயர்ந்தமாந்தர், கல்வியினுல் பெரியவன் கம்பன், என்று மூன்ரும் வேற்றுமை உருபு கொடுத்தே பேசுவர்.

இச் செய்யுளில் வந்துள கண்ணின், என்பது ஐந்தாம் வேற்றுமை நீங்கல் பொருளது.

குற்றமும் தண்டனேயும்.

(A STORY BY TOLSTOY.)

மொனுக்கோ என்னும் சிறிய நாடு ஒன்று பிரான்ஸ் இத்தாலியா நாடுகளின் எல்லேப் புறத்தில், மத்திய தரைக்கடலுக் கருகாமையில் இருந்தது. இது மிகமிகச் சிறிய நாடு. இந்நாட்டுறையும் மாக்களின் தொகை ஏழாயிரமே யாகும். என்ருலும் இதற்கு அரசன் ஒருவன் இருந்து வந்தான். நாட்டின் சுற்றளவும் ஜனத்தொகையும் சிறியதேயாயினும், பாராளும் பூவேந்தர்க்குரிய கோலும் கொடியும் நெடுமாடக் கோயிலும் தானேயும், தானேத்தலேவனும் மந்திரியும் பிரதானியும் முதலாய வைபவங்களில் இச்சிறு நாடு காக்கும் சிற்றரசன் குறைந்தவன் அல்லன். மதம் காக்கும் பாதிரிமார்களும் அங்கு இருந்தனர்.

இந்நாட்டின் காப்பாய் அமைந்த சேனேயோ பெரிய சேனே யன்று. அறுபது வீரர்களேயே கொண்டது அது. ஆயினும் அது சேனேயேதான் அல்லவா? மற்றப் பெரிய நாடுகளேப்போலவே, பிரஜைகள் இங்கு வரியும் செலுத்தவேண்டும்.

சில ஆண்டுகளுக்குமுன் இச்சிறு நாட்டில் கொலேயொன்று நடந்தது. இதுவே இந்நாட்டிற்கு முதற் கொலே. ஜனங்கள் இயற்கையிலே அமைதியுடையவர்கள் ஆதலால் அங்கு அந்நாள்வரையில் கொலேயொன்றும் நடந்ததேயில்லே. காவலர் கொலேயாளியைக் கைது செய்து நீதிபதியின்முன் விசாரணேக்குக் கொண்டுவந்தனர். நியாயாதிபதியும், ஜூரிகளும் வக்கீல்மார்களும் சாக்ஷிகளும் ஒருமுகமாய்க் குற்றவாளியின் தலேயை வாங்கிவிடுதலே நியாயம் என்று தீர்மானித்து, முடிவை மன்னனுக்கு அறிவித்தனர். அவனும் ஓம் என்றுகூறித் தீர்ப்பை உறுதிசெய்தான்.

ஆனுல் தீர்ப்பை நிறைவேற்றிவைக்கும் விடயத்தில் சங்கடம் ஏற்பட்டது. தூக்கிலிடவேனும் தலேகொய்யவேனும் தேவையான எந்திரச் சாதனங்களே அந்நாடு பெற்றதில்லே. கூலிக்குக் கொலேசெய்யும் கொலேயாளிகளும் அங்கு இல்லே. இந்நிலேயில் என்செய்வது? செய்வினேதேரக் கூடினர் மந்திரக்கிழவர். கூடியவர், அருகிலுள்ள பிரஞ்சு அரசாங்கத்தாருக்கு எழுதித் தூக்குமரத்தையும் கொலேயாளிகளேயும் வரவழைத்துவிடுவதென முடிவு செய்தனர்.

உடனே கொலேசெய்யும் எந்திரமும், அதற்குரிய ஆள்களும் அனுப்பமுடியுமா வென்றும், முடியுமெனின் அதற்கான செலவை அறிவிக்குமாறும் கேட்டனர். பிரஞ்சு அரசாங்கத்தாரிடமிருந்து எந்திரமும் ஆளும் அனுப்பிவைக்க முடியுமென்றும், அதற்குப் பதினுயிரம் பொன் செலவாகுமென்றும் பதில்கிடைத்தது.

அரசனுக்கு இச்செய்தியை மந்திரிகள் அறிவிக்க அவன் சிந்திக்கலாயினன். 'பதினுயிரம் பொன்னு! இந்தப் பயலுக்கா? இவன் புல்லிய தலேயை வாங்குவதற்கு இத்தனே செலவா? பதினுயிரம் பொன் என்ருல் ......சமஸ்தானக் குடிகளில் ஆளுக்கு இரண்டு பொன் வீதம் ஆகிறது. சீ, இது சரியல்ல. குடிகளும் இச்செலவை ஏற்பதற்கு விரும்ப மாட்டார்கள். கேட்டால் கலகம் விளேத்தாலும் விளேப்பர். வேண்டா. ஆனுல் குறைந்த செலவில் வேறுவழியில் இக்காரியம் முடியுமானுல் நலமாயிருக்கும். யோசித்துப் பாருங்கள்.' என்று கூறினுன் அரசன்.

இதுகேட்ட மந்திரிமார்கள் மீண்டும் கூடினர். இத்தாலிதேசத்தின் ஞாபகம் வந்தது. 'பிரான்சோ குடியரசு நாடு. எனவே அந்நாட்டார் முடிசூடிய மன்னரை மதியார். இத்தாலி அரசனேக் கொண்டு காரியத்தை முடித்துவிடலாம். அரசனுக்கு அரசன் இச்சிறு உதவி செய்ய மறுக்கமாட்டான். குறைந்த செலவில் காரியம் முடிந்துவிடும்' என்று கருதினர். அவ்வாறே இத்தாலி நாட்டு அரசாங்கத்திற்கு மன்னன் கடிதம் விடுத்தான்.

தலேவாங்கும் எந்திரமும் ஆளும் கொடுக்க முடியுமென்றும், அதற்குப் பன்னீராயிரம் பொன் செலவாகுமென்

றும், இத்தாலியிலிருந்து பதில் வந்தது. இது சிறிது சகாயந்தான். எனினும் மொனுக்கோ நாட்டிற்கு இது பெருந்தொகையே. இத்தனே பொன்னே இவ்வொரு கயவன் தலேவாங்கவா செலவிடுவது என்று மீண்டும் கருதினர். போர்வீரர்களில் ஒருவனேக்கொண்டு இக்காரியத்தைச் செய்துவிட்டால் என்ன. சுலபமாய்ப் பணச்செலவு மில்லாது முடிந்து விடுமே என்று தோன்றிற்று. தானேத் தலேவனே அழைத்துக் கேட்டனர். அவனும் தனது வீரர்களுடன் கலந்து பேசினுன். 'போரில் பொருதற்குக் கற்ருேமேயொழியக் கொலேத்தொழில் புரியக் கற்றதில்லே.' என்று ஒரு முகமாய் அவர்கள் கூறி மறுத்து விட்டனர்.

அரசாங்க அதிகாரிகளுக்கு செய்வது என்னென்று விளங்காதுபோயிற்று. மந்திரிகளும் மற்றவர்களும் ஒன்று சேர்ந்து இது விஷயமாய் முடிவொன்று செய்ய ஒரு 'கமிட்டியை' (Committee) நியமித்தனர். இந்தக் கமிட்டியிற்குள் உட் கமிட்டியும் (Sub Committee) ஏற்பட்டது. பலநாள் ஆலோசனே செய்து, ஆலோசனே கமிட்டியார் மரணதண்டனேயை ஆயுள்பரியந்தமான காவல் தண்டனேயாய் மாற்றிவிட்டால் கவலேயும் பணச்செலவும் இல்லாதுபோய்விடும். என்று யோசனே கூறினர். மன்னனும் மகிழ்வுடன் ஏற்ருன்.

ஆனுல் என்! மற்ருெருஇடையூறு இதனுள் புகுந்தது. ஆயுள்பரியந்தம் ஒருவனே அடைத்துவைப்பதற்கேற்ற காவற்கூடத்திற்கு என்செய்வது? அந்நாட்டில் ஒரு நாள் அல்லது ஒரு வாரத்திற்கு மேற்படாதகாலம் வரைச் சிறைவைக்க ஏற்றவிடந்தான் உண்டு. என்செய்வது? வெகுபிரயாசைப்பட்டு இடமொன்றுதேடிப் பிடித்தனர். அதில் குற்றவாளியை அடைத்து அவன் வெளியேறிப் போய்விடாது பார்த்துக்கொள்ள ஒரு காவற்காரனேயும் நியமித்தனர். அரண்மனே தர்மசாலேயிலிருந்து உணவு வாங்கிவந்து கொடுத்தும், அவன் ஓடிவிடாது காத்தும் வந்தான் காவற்காரன்.

மாதங்கள் சில சென்றன. வருடம் ஒன்றும் கழிந்தது. அரசன் ஒருநாள் அரசாங்க நிர்வாக வரவுசெலவுக் கணக்கைப் பார்வையிடலாயினன். கணக்கில் புதிய செலவு இது இருக்கக் கண்டான். சிறைவைத்திருப்பவனது காவல், சாப்பாட்டிற்கென ஏற்பட்ட செலவு இவ்வளவெனக் கண்ட அரசன் சிந்தித்தான். அந்தக் கீழ்மகனுக்காகக் காவற்காரன் வேண்டியிருக்கிறது. தண்டச்சோறு போடவேண்டி யிருக்கிறது. இதற்கென வருடத்திற்கு அறுநூறு பொன்னுக்கு மேலாகிறதே. அவனே கிழவனல்லன். பால்யனுயிருக்கின்ருன். உடல் உரத்தை நோக்குங்கால் இன்னும் ஐம்பது ஆண்டுகள் நிச்சயமாய் உயிரோடிருப்பான். கணக்குப் பார்த்தால் செலவு பெருகிவிடும், என மதித்த மன்னவன் தன்னவை அமைச்சரை அழைத்துவரப் பணித்தான்.

அரசன் ஆணேயேற்று வந்தவர்களேப் பார்த்து, 'ஐயன்மீர், இந்தக் கைதி அரசாங்க வருமானத்தை விழுங்கிவிடுவான் போலிருக்கிறது. இச்சுமையை நாடு தாங்காது. இவன்பொருட்டு ஆகும் செலவைக் குறைக்க ஏற்பாடு செய்தே தீரவேண்டும்!" என்று மன்னன் கூறலும் அவர்கள் தனியிடம் சென்று சிந்தித்தனர்.

"காவற்காரனே நீக்கி விட்டாலென்? செலவு குறையும்" என்ருன் ஒருவன். 'கைதி ஓடிவிடுவனே,' என்ருன் மற்ருெருவன். இம்மொழி கேட்ட முதன்மந்திரி 'ஓடிப்போனுல் போகட்டுமே. நமது நாட்டைப் பிடித்த சனியன் தொலேந்தது, தொலேயட்டும்' என்று கூற எல்லோரும், 'அதுவே சரி' என்றனர். இதை அரசனுக்கறிவிக்க அவனும் அப்படியே ஆகட்டும் என்ருன்.

காவற்காரனே நீக்கினர். கைதி வெளியேறவில்லே. சாப்பாட்டு வேளேக்கு உணவு வாராமையால் வெளிவந்தான். வந்தவன் காவற்காரனேக் காணவில்லே. தானே தர்மசாலே சென்று உணவை வாங்கித் தின்றுவிட்டுத் தனது அறைக்குள்வந்து கதவைத் தாளிட்டுக்கொண்டு படுத்துக்கொண்டான். மறுநாளும் அவ்வாறே செய்தான். இவ்வாறு பலநாள் கழிந்தது. வாரங்களும் சென்றன. ஓடுபவனுய்த் தெரியவில்லே.

மந்திரிமார்கள் நினேத்தவாறு குற்றவாளி ஓடிவிடாது கிடக்கவே திரும்பவும் எல்லோரும் சபை கூடினர். கூடியவர், அவன் ஓடிப்போக மாட்டான்போல் தோன்றுகின்றது. அவனிடம் நாம்போய் இனி அவன் இங்கு இருக்கவேண்டியதில்லே, என்று கூறிவிடுவதெனத் துணிந்தனர். உடனே நீதிபதி அவனே வரவழைத்து, "நீ ஏன் ஓடிவிடா திருக்கின்ருய். உனக்குத் தடையாய் காவற்காரனும் இல்லேயே! நீ எங்கே வேண்டுமானுலும் போகலாம். அரசன் ஒன்றும் செய்யமாட்டான்" என்று கூறினர்.

குற்றவாளி, நீதிபதியை நோக்கிச் சொல்வான்; "ஐய, நான் ஓடிப்போனுல் அரசன் எதுவும் செய்யமாட்டான் என்பதை அறிவேன், ஆனுல் எனக்குப் போகத்தான் இடமில்லே. நான் ஓடி என்ன செய்கிறது. நீங்கள் எனக்குத் தண்டனே விதித்து என்னேக் கெடுத்து விட்டீர்கள். தண்டனே அடைந்தவன் என்று எல்லோரும் என்னே ஒதுக்குவர். ஜனங்கள் என்னே மதிக்க மாட்டார்கள். வேலேசெய்து பிழைக்கலாமோ என்ருல் அதுவும் இனி முடியாது. சிறையிலிருந்ததால் வேலேசெய்யும் பழக்கத்தையும் இழந்துவிட்டேன். நீங்கள் என்பால் வழங்கியது நீதியல்ல. அநீதியே. ஆதியில் நீங்கள் எனக்கு விதித்தது மரணதண்டனே. அதை நீங்கள்நிறைவேற்றி யிருக்கவேண்டும். அவ்வாறு செய்யாதது அநீதி அல்லவா. இருப்பினும் அதற்காக நான் குறைகூற முன்வரவில்லே. பின்னர் ஆயுள் தண்டனே விதித்து எனக்குச் சாப்பாடு முதலான வசதிசெய்து கொடுக்க ஒரு ஆளே நியமித்தீர்கள். அவனேயும் பிறகு நீக்கிவிட்டீர்கள். நானே போய்ச் சாப்பாடு தேடிக்கொள்ள வேண்டியதாயிற்று. அதற்காகவும் உங்கள்மீது குறைகூறவில்லே. ஆனுல் இதுபோது வெளியேறிவிடு என்று சொல்லுகிறீர்களே, இது நீதியாமோ! இதை நான் ஏற்கமுடியாது. நீங்கள் செய்வதைச் செய்யுங்கள். நான் இவ்விடம்விட்டு எங்கும் போகமாட்டேன். சரதம்"

இவ்வார்த்தையைக்கேட்டு வியப்படைந்த நீதிபதியும், மற்ற மந்திரிகளும் இனிச் செய்வது யாதெனத் தெரியாது விழித்தனர். மீண்டும்கூடி யோசித்தார்கள் கைதியோ வெளியேற மாட்டேன் என்று கூறுகின்ருன். அவனே எப்படியாவது வெளியேற்றிவிட வேண்டும். கடைசியாகப் 'பென்ஷன், கொடுத்து அவனே இந்நாட்டினின்று அனுப்பி விடுவதெனத் தீர்மானித்தனர் அரசனுக்கு விஷயத்தைக் கூறக் கடைசியில் குற்றவாளிக்கு வருஷம் ஒன்றுக்கு அறுநூறு பொன் பென்ஷனுகக் கொடுத்துவிடுவதென்று முடிவு செய்யப்பட்டது. இம்முடிவை குற்றவாளிக்கு அறிவித்தார்கள்.

இதைக் கேட்ட குற்றவாளி, 'ஐயா, நல்லது. நீங்கள் சரிவர இத்தொகை கொடுத்துவருவீரானுல் எனக்கு வெளியே செல்ல ஆக்ஷேபணே எதுவும் இல்லே. தவறினுல் வந்து விடுவேன். அந்த நிபந்தனேயின் பேரில் நான் போகச்சம்மதம்' என்று மொழிந்தான்.

மொனுக்கோ நாட்டார் மூன்றிலொரு பங்கு பென்ஷன் தொகையை முன்பணமாகக் கொடுத்துவிட்ட

னர். அவனும் அதையேற்று நாட்டைவிட்டுப் புறப்பட்டு அந்நாட்டுக் கருகிலுள்ள எல்லைப்புறப் பிரதேசத்தில் குடியேறினன். பெற்ற பென்ஷனைக்கொண்டு சில ஏக்கர் நிலம் வாங்கித் தோட்டம் போட்டுக் காய்கறிகளைச் சந்தையில் கொண்டுபோய் விற்பதும், மற்ற நாட்களில் தோட்டத்தில் வேலை செய்வதுமாய் வாழ்க்கையை நடத்தினன். மாதந்தோறும் மொனுக்கோ நாடு சென்று பென்ஷன் தொகையைப் பெற்று வருவான். அவனது வாழ்க்கை அமைதியும் தூய்மையும் நிறைந்ததாய் அமைந்தது.

வேறு நாடாய் இருந்தால் என்னவாயிருக்கும்? அவனைத் தூக்கிலிட்டிருப்பர். அல்லது குடிகளின் பணம் வீணுவதைக் கவனியாது ஆயுள் பரியந்தம் சிறையிலிட்டிருப்பர். அத்தகைய நாட்டிலே அவன் பிறந்து வளர்ந்து இக்கொலைக் குற்றம் செய்யாமற் போனது அவனது நல்ல காலமென்றே சொல்லவேண்டும்.

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

9. அகலிகைப்படலம்.

(932-ம் பக்கத் தொடர்ச்சி.)

இயற்கையி னழகி லிழைபவர் கம்பர்.

வேள்வியை இனிதின் முற்றி மிதிலையைக் கருதிப் போந்த விச்வாமித்திரன் இராம இலக்குமணர்களோடு சோணமா நதியைச் சேர்ந்தபோது, சூரியன் தனது சாரதியாகிய அருணனுடைய கண் பார்க்கின்ற வேகத்திற்கும் மேற்பட்ட விசையுடைய குதிரைகள் கட்டிய தேரோடும் கடலுள் குளிக்க, மாலையைக் கழிப்பதற்கு அம்மூவரும் ஓர் அழகிய சோலைபுக் கடைந்தனர். இராமனும் முறைப்படி 'இனிய சோலை யாது' என வினவ முனிவன், காசிபன் மனைவி திதி என்பாள் இந்திராதியரை மடித்தற்கு ஒத்த ஓர் மகவைப் பெறும் பொருட்டு அங்குத் தவங்கிடக்க நேர்ந்த கதையைக் கூறினன். பொழுதும் புலர்ந்தது.

அங்கு நின்றெழுந் தயன்முதன் மூவரு மனையார்
செங்க ணேற்றவன் செறிசடைப் பழுவத்தி னிறைதேன்
பொங்கு கொன்றையீர்த் தொழுகலாற் பொன்னியைப் [பொருவும்
கங்கை யென்னுமக் கரைபொரு திருநதி கண்டார்.

நதியைக் கண்டாரென்றால் நம் கம்பருக்கு ஓர் சிலேடை நாமுதல் வந்து நிற்கின்றது போலும். பொன்னி என்னும் பேருடைய காவேரிக்கு நிகராய கங்கையின் கரையை சேர்ந்தனர், என்னுங்கால் அவ்விரு பெரும் நதிகளும் நிகராதல், 'செங்கண் ஏற்றவன் செறி சடைப் பழுவத்தின் நிறைதேன் பொங்கும் கொன்றை ஈர்த்தொழுகலால்,' நேர்கின்றதென்று செப்புவாராயினர். சிவந்த கண்களையுடைய ரிஷப வாகனனாகிய சிவபிரானது அடர்ந்த சடையாகிய காட்டிலிருந்து நிறைந்த தேன் பொங்குகின்ற கொன்றைமலர்களை அடித்துக் கொண்டு வருவதால் கங்கையாறு, சிவந்த கண்களையுடைய ஆண்புலிக் கொடியினன் சோழவேந்தனது அடர்ந்த வேர்களுடைய காட்டிலிருந்து நிறைந்ததேன் பொங்குகின்ற கொன்றை மலர்களை அடித்துக் கொண்டு வருகின்ற காவேரிக்கு நிகராயிற்று. இந்தச் சிறு சிலேடையின் உதவிகொண்டு கம்பர் தன்னூடு பாய்கின்ற காவிரி நதியின்பால் அபிமானம் பாராட்டிக்கொள்கின்றனர். கங்கையைப் பொருவும் காவிரி என்பது மரபாயிருக்கக் கம்பர் தன்காவிரியை நிகர்க்குங் கங்கையென்று மாற்றிக் கூறியது போன்றே, அவரது சுயஸ்தானாபிமானம் (Local Patriotism) இப்பொன்னியின்பால் வேறோரிடத்திலும் தோன்றித் திகழ்கின்றது. இனி, இவர் மிதிலாநகரத்துக் கடைவீதியின் வணிகப் பொருள் வளப்பத்தை எடுத்தோதுஞ் சமயத்தில்,

வரப்பறு மணியும் பொன்னும்
ஆரமுங் கவரி வாலும்
சுரத்திடை யகிலு மஞ்ஞைத்
தோகையுந் தும்பிக் கொம்பும்
குரப்பணை நிரப்பு மள்ளர்
குவிப்புறக் கரைக டோறும்
பரப்பிய பொன்னி யன்ன
வாவணம் பலவுங் கண்டார்.

[வரம்பற்ற இரத்தினங்களும் பொன்னும் சந்தனமும் கவரியும், பாலையில் கிடைக்கும் அகிலும், மயில்தோகையும், யானைத்தந்தமும், ஆகிய இவைகளையே செய்கரைகள் செய்யும் மள்ளர் குவித்து அணைகோலும்படி கரைகளெல்லாம் பரப்பிய காவேரி நதிக்கு நிகரான கடைவீதிகள் பல இராம இலக்குமணர்கள் மிதிலையிற் கண்டனர்]

என்று வீறுகோளணி எனும் நலத்தினால் காவிரிக்கு இணையெனத்தக்க ஆவணத்தின் சிறப்பைப் பயக்குவிக்கின்றனர்.

கங்கையைக் கண்ணுற்ற வளவிலே இராகவன் தன் இயல்பின்படி, " இந்த மாநதிக்கு உற்றுள தகைமையை யாவும், எந்தை கூறுக" என்று வினவுதலும் கோசிகன், சகரமன்னன் அசுவமேத யாகம் புரிந்ததுமுதல், பகீரதன் செய்த அருந்தவ மீறாக யாவையும் விளம்பி, விசும்பின் கங்கை பூவுலகு இறங்கிய பரிசும் பகர்ந்து முடித்தனன். இன்னதன்பின்னர் மூவரும் அவ்விடம் விட்டேகினர். ஏகு நெறியில் தம்மை எதிர்கொள வந்த விசாலை வேந்தனுடன் அளவளாவி, அங்கு நின்றும் அகன்று,

பள்ளி நீங்கிய பங்கயப் பழனநன் னூரை
வெள்ள வான்களை களைவுறு கடைசியர் மிளிர்ந்த
கள்ள வாணெடுங் கண்ணிழல் கயலெனக் கருதா
அள்ளி நாணுறு மகன்பணை மிதிலைநா டடைந்தார்.

[வயல்களில் தாமரைப் பள்ளிவிட்டு நீங்கியநாரைகள், சிறந்த களைகளைக் களையும் உழத்திகளது கள்ளம் வாய்ந்த பெரிய கண்களின் நீரில் விளங்கும் நிழலைக் கயல்மீன் என்று எண்ணிக் கொத்தி வெட்கமடையும் அகன்ற வயல்களையுடைய மிதிலைநாட்டை அடைந்தனர்]

இக்கதைக்கோர் இறைவியாய சீதாபிராட்டி எழுந்தருளியிருக்கும் விதேகநாட்டினைக் கம்பர் இதுமுதல் எழு பாசுரங்களால் இனிது பாடுகின்றனர். இவரால் பாடப்பெறுவன, நாரைப்பழனமும் சுரும்புச் சோலையும் காவியங்கழனியும் புன்னுறைபொய்கையும் மதுபொதி நதியும் வாளைபாய்ஓடையும் கடிமலர்க்குளங்களும் அன்றி யாவையே. எமதன்னை இருக்குமிடம் இயற்கை

வளத்திடையே யாதலால் புள்ளும் வாவியும் பொழிலும் நதியும் மிதிலைநாட்டில் மிக்குயர் கின்றன. இயற்கையோ டியன்ற வாழ்க்கையர் மள்ளரும் சிலர் இவ்வருணனையி னிடையே வருவர். இயற்கையின் உவகை இயங்கிக் காட்டுகின்றதென நடனம் செய் நங்கையர் தோன்றுவர். இயற்கைதன் இலயத்தின் எதிரொலியாமெனும் முழவும் பாணியும் இசைதரப் பொலியும். மேதியின் பாலும் தீங்கனிச்சாறும் கரும்பின தமுதமும் நறுமலர்த் தேனும் நாடெங்கும் இனிக்க இனிக்கப் பெருகும். திருமகள் ஒருநாடு இருந்தா ளென்பதற்குப் பொய்க்காத சான்று இவையலால் பிறிதில்லை. அமைதியும் இனிமையும் யாண்டுள ஆண்டுளள் அகிலாண்ட நாயகி. அன்னாள், இயற்கையின் விளையாட்டைக் காண இனிதுவக்கும் மனத்தினள். கயலெனக் கடைசியர் கண்ணிழலை யள்ளிய நாரைகள், இயற்கையெனு மன்னை உவகை நகையோடு காண நாணின. நாரையின் எளிமைகண்டு நகுவானேன்! நங்கையர் நயன நோக்கம் நாடிய நினைவால் நைந்து சங்கையும் தாமுமாகிச் சஞ்சலமுற்ற நிற்கும் மள்ளர்தம் புத்திதானும் நாரைக்கு நேரேயாகும். ஏனெனில்,

பட்ட வாணுதன் மடந்தையர் பார்ப்பெனுந் தூதால்
எட்ட வாதரித் துழல்பவ ரிதயங்கள் வெறுப்ப
வட்ட நாண்மரை மலரின்மேல் வயலிடை மள்ளர்
கட்ட காவியங் கட்கடை கழிப்பன கழனி.

[களைந்தெறிந்த காவிமலர்கள் வட்டமான புதிய தாமரைமலர்களின்மேல் விழுந்து கிடக்கத் தம் காதலார் கடைக்கண் சாடைக் கவாவித் திரியும் மள்ளர்கள், மேற்சொன்னவாறு முகம்போன்ற தாமரைமலர்களைக் கண்டு, அவை மாதரார்முகமே என மயங்கி, அவர் தமக்குக் கடைக்கண் நோக்கம் போக்குவார்களென்று வெகு நேரம் காத்திருந்து, கண்ணும் முகமும் என்று இவர் கருதியன குவளையும் தாமரையுமே ஆதலால், அந்நோக்கம் ஒன்றும் நேர்வதின்றி மனஞ்சலித்து அகலும்படி செய்வன கழனிகள்]

என்பதால், கண்ணைக்கயலென்று நாரை மயங்கியதென்னின், குவளையைக் கண்ணென்று மள்ளரும் மயங்கினர் எனத் தெரியலாகின்றது.

வயல்களின் செயல் இவ்வாறாகத் தண்ணறும் பொழில்களில் இயற்கை நாடகம் இனிதின் நடைபெறும்:—

வரம்பின் வான்சிறை மதகுகண் முழவொலி வழங்க
அரும்பு நாண்மல ரசோகங்க ளலர்விளக் கெடுப்ப
நரம்பி னன்றதேன் றாரைகொ ணறுமலர் யாழின்
சுரும்பு பாண்செயத் தோகைநின் றாடுவ சோலை.

[விசாலமான பெரிய நீர்க்கரைகளில் புனல்மோதிய மதகுகள் மத்தளம்போல ஒலிக்கவும், அரும்பிய புதிய மலர்களையுடைய அசோகமரங்கள் விளக்கெங்கும் ஏற்றியிருப்பதுபோல் புஷ்பித் திருக்கவும், நரம்பைப்போல் தொங்கும்படி தேனின்தாரை வழிகின்ற நறிய மலர்களாகிய யாழில் வண்டுகள் பாடவும், மயிலானது இடைவிடாது ஆடிக்கொண் டிருக்குந் தன்மையன சோலைகள்.]

கோசல நாட்டின் பெருமையைக் கூறுங்கால் கம்பர்,

தண்டலை மயில்க ளாடத்
தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கண் முழவி னேங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட
மருதம்வீற் றிருக்கு மாதோ

என்று மருதத்தரசி கொலுவீற்றிருந்த வைபவத்தின் ஓர் அங்கமாயமைந்த மயிலின் நடனத்தைத் தனியாக எடுத்து இவ்விதேக நாட்டின்கண் பாராட்டுவாராயினர்.

நளிபுனற் கழனியும் தண்ணிழற் சோலையும் இன்னபடி விளங்கப் பூவொடும் புள்ளொடும் பொலியும் பொய்கையின் செவ்வியை,

தூவி யன்னந்த மினமென்று நடைகண்டு தொடரக்
கூவு மென்குயிற் குதலையர் குடைந்ததண் புனல்வாய்
ஓவில் குங்குமச் சுவடுற வொன்றொடொன் றூடிப்
பூவு றங்கினும் புள்ளுறங் காதன பொய்கை

எனக் கம்பர் புகழ்ந்துளார். கூவுங் குயிலென மாதரார் தம்முள் குதலை மிழற்றிப் பொய்கையுள் நீராடப்புகுவதும் அன்னவர் நடைகண்ட அன்னச் சேவல்கள் தம்மினம் எனக் கருதித் தொடர்வதும், தொடர்ந்து அவராடிய நீரிற்படிவதால் தம் சிறகினில் குங்குமச்சுவடு தோன்றலாவதும், இச்சுவடுகளைக் கண்டு அன்னப்பெடைகள் ஊடுவதும், இவ்வூடற் பூசலால் இரவு முழுவதும் புள்ளினங்கள் அப்பொய்கையில் கண்படாதிருப்பதும் காணக் காணக் காண்போர் கருத்தெலாம் தித்திக்கும் வண்ணம் நம் செஞ்சொல் ஓவியப் புலவர் இயங்கு சித்திரம் இங்குக் காட்டுவார்.

நதியினிற் பெருகுவது நீரன்று; மற்று யாதெனில் கூறுவார் கம்பர்:—

முறையி னின்முது மேதியின் முலைவழி பாலும்
துறையி னின்றுயர் மாங்கனி தூங்கிய சாறும்
அறையு மென்கரும் பாட்டிய வமுதமு மழிதேம்
நறையு மல்லது நளிர்புனல் பெருகலா நதிகள்.

[முறையாக வருகின்ற முதிர்ந்த எருமைகளின் முலைகளிலிருந்து வழிகின்ற பாலும், கரைகளில் நின்று உயர்ந்த மாங்கனிகளிலிருந்து வழிந்து ஒழுகிய சாறும், அறுத்த மென்கரும்பை ஆலையில் இட்டு ஆட்டப் பாய்ந்த அமுதம்போன்றஇரதமும், கட்டுடைந்துவழிகின்றஇனிய தேனும் அல்லது குளிர்ந்த நீர் பெருகுவதில்லா நதிகள்]

பாலுந்தேனும் பெருகுமிந் நாட்டின்கண் பயின்ற பாடலும் ஆடலும் புரியுஞ்செயலை ஓடையிலும் காணலாம்.

இழைக்கு நுண்ணிடை யிடைதர முகடுயர் கொங்கை
மழைக்கண் மங்கைய ராங்கினில் வயிரியர் முழவம்
முழக்கு மின்னிசை வெருவிய மோட்டிள மூரி
உழக்க வாளைகள் பாளையிற் குதிப்பன வோடை.

[நூலிழைக்கும் நுண்ணியதாகிய இடுப்பு மெலியும்படி உயர்ந்த கொங்கைகளையும் குளிர்ந்த கண்களையுமுடைய பெண்கள் ஆடுகின்ற மேடையில் கூத்தர்கள் முழக்குகின்ற மத்தளங்களின் இனிய ஓசைக்குப் பயந்த பெரிய இள எருதுகள் கலக்குவதால் வாளைமீன்கள் கரையில் இருக்கும் பாக்குமரப் பாளைகளில் குதிக்குந் தன்மையன ஓடைகள்]

குளங்களோ வெனில்,

படைநெ டுங்கண்க ளுறைபுகப் படர்புனன் மூழ்கிக்
கடையு மூன்கடற் செழுந்திரு வெழும்படி காட்டி
மிடையும் வெள்வளை புள்ளொடு மொலிப்பமெல் லியலார்
குடைய வண்டினங் கடிமலர் குடைவன குளங்கள்

[வாட்படைபோன்ற நீண்ட கண்கள் இமைகளாகிய உறைக்குள் அடங்குவதென்ன மூடி, படர்கின்ற நீரில் முழுகியும், முன்னாள் கடைந்த கடலில் திருமகள் எழுந்தவிதம் இன்னபடி என்று காட்டுவதுபோல் எழுந்தும், நெருங்கிய வெண்சங்குகளும் புள்களும் ஒலிக்க மெல்லிய தன்மையுடைய மாதர் குளிப்பதால் அஞ்சிய வண்டுகள் வாசனை பொருந்திய மலர்களுக்குள் குடைந்து ஒளிக்கும் தன்மையன குளங்கள்]

விதேக தேசத்தின் வளமும் அழகும் இவை. பருகச் சுவைக்கும் பாலுந்தேனும், கருதினுஞ் சுவைக்குங் காட்சிச் செல்வமும் மெழுகித்திகழும் நாடு இந்நாடு. மயங்குவதெல்லாம் இங்குக் கண்ணைக்கயலென்றும் மலரை முகமென்றும் கொள்வதல்லால் தத்தம் நிலைதடுமாறித் தயங்குவார் யாண்டுமிலர். முழவிற்கஞ்சும் மூரியும் மாதர் குடைதற்கஞ்சும் வண்டும் அஞ்சினால் உளவே அன்றி வெருவரப் பதைப்பன எவையுமில. குங்குமச்சுவடு கண்டு ஊடிய குருகின்பாலே தங்கின பூசலெல்லாம், சண்டையோ வேறேயில்லை. இயற்கை இங்கு இடையூறின்றி நடப்பதால், அழகிது இனிமையீது அமைதியும் இன்னது இத்தனிப்பெரும் விதேக நாட்டில் வைகலும் வைகக் காண்கின்றோம். இயற்கையைப் பாடும்போதெல்லாம் கம்பர் அதனோடு இழைந்து விடுகின்றார்.

T. N. சேஷாசலம்.

வானசாஸ்திரம்.

(911-வது பக்கத் தொடர்ச்சி)

நக்ஷத்திரங்கள்.

பூமி, சூரியனைச் சுற்றிவருவதனால் 180,000,000 மைல் தூரம் நிலைபெயர்ந்து செல்கின்றதென்றும், இவ்விதம் நிலைபெயரும் காரணத்தினால் நக்ஷத்திரங்களிற் சில தத்தம் நிலையிருந்து சற்று விலகுவன போலத் தோற்றப்படுகின்றனவென்றும், இவ்விதம் விலகித் தோற்றும் தூரத்தை அளவெடுத்து அதிலிருந்து அந்த அந்த நக்ஷத்திரங்கள் பூமியிலிருந்து எவ்வளவு தூரத்திலிருக்கின்றனவென்பதைக் கணக்கிட்டிருக்கிறார்களென்றும் மேலேசொன்னோம். இவ்விதம் தூரங்கள் கணிக்கப்பட்ட நக்ஷத்திரங்கள் சிலவே. எஞ்சியவை கணக்குக் கடங்காத தூரத்திலிருப்பதனால் அவைகள் தத்தம் நிலையிலிருந்து விலகும் தூரத்தையும் அளவிடுவதற்குத் தற்கால வானசாஸ்திர ஆராய்ச்சியில் கையாளப்பட்டு வரும் மிகவும் சிறந்த கருவிகளாலும் முடியவில்லை. ஆனால் புகைப் படத்தினுதவியால் வெவ்வேறு ஆகாய ஆராய்ச்சி மண்டபங்களிலிருந்து ஏறக்குறைய 2000 நக்ஷத்திரங்களின் தூரங்களைக் கணித்திருக்கிறார். இவ்விதம் கணிக்கப்பட்ட தூரங்கள் சரியானவையென்று நிச்சயமாய்ச் சொல்வது முடியாது. ஆனால் இவைகள் 300 'ஒளி வருஷங்களுக் கப்பாலிருக்கின்றனவென்பது மாத்திரம் நிச்சயமாய்ச் சொல்ல முடியும்.

மேற்சொன்ன விதம் பூமியின் சுழற்சியின் காரணமாக நக்ஷத்திரங்கள் நிலைபெயர்வதாகத் தோற்றப்படும் அசைவு தவிர இவைகளுக்கே உரிய சலனமும் உண்டு என்பது இப்போ சந்தேகமற ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஒரு உண்மை. 12,000 நக்ஷத்திரங்களுக்கு, அவைகளுக்குரிய சலனத்தைக் கணக்கிட்டிருக்கிறார்கள். இவைகள் அந்தரவெளியில் அதிவேகமாகச் சென்றுகொண்டிருக்கின்றன. எத்திசை நோக்கிச்செல்கின்றனவென்பது சந்தேகமறச் சொல்லமுடியாது. ஆனால் வெவ்வேறு திசை நோக்கிச் செல்வனபோலத் தோன்றினாலும் முடிவில் ஒரு குறித்த மார்க்கமாவே போய்க்கொண்டிருக்கின்றனவென்பது துணிபு. இவ்விதம் அந்தர வெளியில் கணக்குக் கடங்காத தூரத்திலிருக்கின்ற நக்ஷத்திரங்கள் ஓடும் வேகத்தைக் கணித்து அதன் மூலமாய் அவைகளின் தூரங்களைக் கணக்கிட்டிருக்கிறார்கள். இவ்விதம் கணக்கிட்ட வரையில் சில நக்ஷத்திரங்களின் தூரம் 2300 ஒளி வருஷங்கள், அதாவது 14,000,000,000,000,000 மைல் என்று ஏற்பட்டிருக்கிறது.

நக்ஷத்திரங்கள் சலனங்களை அளவெடுத்ததிலிருந்து இன்னும் அநேக ஆச்சரியமான முடிவுகள் ஏற்படுகின்றன. முக்கியமாய்ச் சில நக்ஷத்திரங்கள் கூட்டமாய் ஒரே திசை நோக்கி ஒரே வேகத்தோடு ஓடிக்கொண்டிருக்கின்றனவென்பது தெரிகிறது. இவ்விதமான கூட்டங்கள் அந்தர வெளியில் அனேகம் இருக்கின்றன. இவைகள் வெறுங் கண்ணுக்குத் தெரிவதில்லை.

தற்கால வானசாஸ்திர ஆராய்ச்சிக்கு உதவியாயிருக்கும் கருவிகளில் ஒளி பரிசோதனைக் கருவியின் (Spactrascope) மூலமாக நமக்கு எட்டியிருக்கும் உண்மைகள் அனேகம்இதைப்பற்றி முன் ஒருஇடத்தில் சொல்லியிருக்கிறோம். இதன் மூலமாக மற்ற அண்டங்களின் தன்மையை நாம் தெரிந்துகொள்ளக் கூடியதாயிருப்பது மாத்திரமல்லாமல் இவைகளின் ஒளியை இந்தக் கருவி மூலமாய்ச் சோதனை செய்வதிலிருந்து இவ்வண்டங்கள் ஆகாயவெளியிற் போய்க்கொண்டிருக்கும் வேகத்தைக் கணிக்க முடிகின்றது. இவ்விதம் ஒளி பரிசோதனைக் கருவியின் மூலமாக நக்ஷத்திரங்களின் வேகங்களைக் கணிக்குமுறை சென்ற இருபத்தைந்து வருஷங்களுக்குள்தான் நன்கு வரையறுக்கப்பட்டு கையாளப்பட்டு வருகின்றது. இதனோடு புகைப் படத்தின் உதவியால் கணக்கெடுக்கப்பட்ட அளவுகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இவ்விரண்டும் ஒரே அளவையே காண்பிக்கின்றன.

இது மாத்திரமன்று, இக்கருவியின் மூலமாய் கண்ணுக்கு மினிமினிப் பூச்சிபோலத் தோன்றும் அளவிறந்த அண்டங்களின் பரிமாணங்களையும் கண்ணுக்குத் தோற்றப்படாமல் தூரதிருஷ்டியின் மூலமாய்த் தெரிகின்ற எத்தனையோ பல அண்டங்களின் பரிமாணங்களையும் அவைகளின் தன்மை நிலைமை காங்கையின் அளவு ஒளியின் அளவு ஆகிய இவைகள் எல்லாம் நாம் தெரிந்து கொள்ளக்கிடக்கின்றது.

மேற்சொன்ன முறைகளைக் கையாண்டு நக்ஷத்திரங்களின் வேகங்களைக் கணித்ததில் நக்ஷத்திரங்கள் சராசரி ஒரு செக்கண்டிற்கு 12 அல்லது 15 மைல் வேகத்துடன் ஆகாயவெளியில் ஓடிக்கொண்டிருக்கின்றவென்று தெரிகிறது. சூரியனும் ஒரு நக்ஷத்திரமேயாதலினால் அதற்கும்உரிய சலனம் இருக்கிறது. சூரியனின் வேகம் செக்கண்ட் ஒன்றுக்கு 12மைல்என்றுதெரிகிறது, இப்போது இவ்வண்டங்களின் சிலவற்றின் பரிமாணத்தைக் கவனிப்போம். இங்கேயும் ஒளிபரிசோதனைக் கருவிதான் உதவிக்கு வருகின்றது. இதன் மூலமாக சூரியன் 60000 வெப்பமுள்ள தென்று தெரிகிறது. அதுபோல நக்ஷத்திரங்களின் வெப்பத்தை அளவெடுத்ததில் இது மிகக் குறைந்த வெப்பமுள்ள நக்ஷத்திரங்கள். 25000 யும் மிக அதிக வெப்பமுள்ளவை என்று சொல்லக் கூடியவை 160000 உள்ளவைகளாயுமிருக்கின்றனவென்று தெரிகின்றன. இதிலிருந்து நக்ஷத்திரங்களின் பரிமாணங்களைக் கணித்திருக்கிறார்கள். இவ்விதம் அளவெடுத்ததில் அனேகம் சூரியனைப்பார்க்கிலும் எத்தனையோ மடங்கு பெரியவை என்று தெரிகிறது. சூரியனுடைய குறுக்களவு 865000 மைல் என்று முன்னே சொல்லியிருக்கிறோம். நக்ஷத்திரங்களிற் சில250000000 மைலுக்கு மேற்பட்ட குறுக்களவு உள்ளவைகளாக இருக்கின்றன.

நக்ஷத்திரங்களின் வேகம் பரிமாணம் காங்கை ஒளிகளின் அளவை மாத்திரமன்றி அவைகளின் நிறையும் கணிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் நிறை கணிக்கப்பட்ட நக்ஷத்திரங்களின் தொகை கணக்கெடுக்கப்பட்டுள்ள நக்ஷத்திரங்களின் தொகையின் ஒரு சிறுபாகமாயிருப்பினும், இவைகளிலிருந்து நக்ஷத்திரங்களின் சராசரி நிறையைக்கணக்கிடமுடிகிறது. இதன்முறையைவிவரித்துச் சொல்வது சுலபமன்று. சொன்னாலும் கணித சாஸ்திர பூததத்துவ சாஸ்திரப் பயிற்சிஉள்ளவர்களுக்குத்தான் அது விளங்குமாகையால் இதை விவரமாய்ச் சொல்லாமல் விடுகிறோம். நக்ஷத்திரங்கள் அனேகம் சூரியனைப்பார்கிலும் எத்தனையோ ஆயிரமடங்கு பெரியவைகளாயிருக்கின்றனவென்று சொன்னோம்.சூரியனைப் பார்க்கிலும் சிறிய நக்ஷத்திரங்களும் இருக்கின்றன. இவ்விதம் பெரிதும் சிறியதுமான நக்ஷத்திரங்கள் எல்லாவற்றையும் ஒப்பிட்டுப்பார்த்தால் சூரியனுடைய பரிமாணமுள்ள அல்லது சற்றுப் பெரியதான நக்ஷத்திரங்களே மிகுதியானவை என்று தெரிகிறது. இவ்விதம் பரிமாணத்தில் வெகுவாய் வித்தியாச முள்ளவைகளாயிருக்கும் இவைகளின் நிறையை ஒப்பிட்டுப் பார்க்கையில் பெரும் நக்ஷத்திரங்களுக்கும் சிறு நக்ஷத்திரங்களுக்கும் ஏற்படும் வித்தியாசம் மிகச் சொற்பமே.சராசரி நிறையை எடுத்துப் பார்த்தால் மிகச்சிறிய நக்ஷத்திரங்களைப் பார்க்கிலும் மிகப்பெரிய நக்ஷத்திரங்கள் 100 மடங்குக்குமேல் அதிக நிறையுள்ளவைகளாயில்லை.இதன் காரணம்,மிகப் பெரிய நக்ஷத்திரங்கள் வாயு மயமாய் இருப்பது மாத்திரமன்றி இவ்வாயுவும் மிகவும் பரவிஇருப்பதே. சிலநக்ஷத்திரங்களின் அடர்த்திமதுபூமியைக்காட்டிலும் நூறுமடங்கு குறைந்தது என்றுசொல்லுகிறார்கள். சிறுநக்ஷத்திரங்கள் பெரும்பான்மையும் நமது பூமியயைப்போன்ற அடர்த்தியுள்ளவை. இதனால்தான் நிறையளவில் நக்ஷத்திரங்களுக்கிடையில் பரிமாணத்தினளவில் காணப்படும் வித்தியாசம் இல்லை.

காந்திமதி என்னும்

காந்தாரநாட்டுக் கட்டழகி.

(928-வது பக்கத் தொடர்ச்சி)

37. போர்முறை

முன் கண்டவாறு, மகேந்திரனாகிய கந்தன்தன் கண்கரிக்கக் கலாநாதன் குழுமிய மாந்தருக்கிடையே கறங்குபோல் அங்குமிங்குந் திரிந்துகொண்டிருந்தனன். காந்திமதி அதுபோது இருந்தது இக்கந்தனுறைகுன்றத்திலென்று நம் கம்மியன் மதித்திருந்தானதலால், அன்னவனைக் காணுந்தோறும் கதித்தெழும் கோபத்தனாகிக் கண்கள் தீச்சிதறக் கை பிசைந்து எயிறுதின்று தோன்துடித்துத் துளங்கிய தியற்கையே. வல்லூறு கண்டதொரு கபோதமென்னக் கந்தன் விலவிக்கக் கலாநாதன் அவனைக் கறுவிநோக்கினான். "மைந்த, இன்று நீ இப்போரில் தப்பினாயாயினும், நின்சேவகன் உரைத்தவுரை காப்பானாயின் நாளை நீ என்னுடன் தனிப்போர் புரிதற்குள்ளாய். அன்று நீ பிழைத்தாலன்றோ அழகியின் கையைச் சேர்வாய்," என்னும் எண்ணத்தால் இடையிடையே முட்டி குலுக்கிக்கொண்டிருந்த கலாநாதனது கண்கள், போர்க்கோலம்பூண்டு சிலம்பு சிலசூழ்வரு சயிலத்தலைவனேபோல் திரிதரும் தினகரனையும் அவன் திண்ணிய மைந்தர் எண்மரையும் பருகப் பருக அன்னவர்பால் வயங்கும் வீரத்தினாலும் அன்னார் திரண்டுயர்ந்த தோற்றத்தினாலும் வலிக்கப்பெற்று அவன், "இன்னவருடன் போர்புரியாது யான் இருந்தென், இல்லா தொழிந்தாலென்!" எனச் சிந்திக்கலாயினான். கார்த்தியும் இப்போர் நினைவிற்கு இடங்கொடுத்து அவன் கருத்தினின் றொருசிறிது தகன்றுவிட்டனன். கந்தனும் காந்தனன். தினகரனை நோக்கநோக்க இவன் தோள்களைத் தினவு மொய்த்தன. வாட்போரும் வெறுத்தனன். மெய்யொடு மெய்தழுவிப் புரியும் மற்போர்க்கே அவாவியது அவன்மனம்.

இங்கு இவன் கலாநாதன் இன்னதன்மையனாக அங்குச் சமரபூமியில் யாவரும் போரிற்கு ஆயத்தமாயினர். மடாதிபதி அகிலாண்டேச்வர சுவாமிகளும் பின்பிறந்தோன் விராடபத்திரனும் இருமருங்குந் தாங்க விச்வகேசரிமன்னன் வந்தெய்தி விதானநிழலில் அமைந்திருந்த பொன்னாதனத்தில் அமர்ந்தனன். தரையிலே தைத்த பார்வையன் அரசன் தலைநிமிராது, நாற்புறமும் வெறித்துப்புரண்ட நோக்கினனாய தம்பியை விளித்து, "விராடா, என்மனம் இங்குத் தரிக்கவில்லை. வருவான் என்ற எனதாருயிர் மைந்தன் இன்னும் வந்திலன். இச் செருவினை விரைவில் முடிக்குமாறு செய்......உடலந் தளர்கின்றது," என இயம்பினான். மடாதிபதி [illegible] வாறு வதங்கும் வேந்தனை அணைந்து, "அண்ணலே தளரவேண்டா. யாம் ஈண்டுப் புறப்படுங்கால் புட்குறி கருதினேன். நினது துயரமனைத்தும் நீங்கும் செவ்வியும் இன்றே நேர்கின்றதென் றறையும் சகுனங்களெல்லாம்," எனப் பரிவினோடும் புகன்றிட அரசன், "அடிகாள் உமதருள் உண்டாயின் உய்வேன்" என்று எதிர் விளம்புமளவில்,தேவாலயத்தின்கண் உள்ள பெருமணிகளெல்லாம், "ஆகுக. ஆகுக" என்பனபோல் கணகணவென ஒலித்தன. அரசே, அருட்பெருங் கடவுளின் உறுதிமொழி இது, இயம்பக் கேள்" என்றனர் மடாதிபதி. வேந்தனுக்கு உரோமம் சிலிர்த்தது. புத்துயிர் புகுந்தாலென்ன அவன் உடல் பூரித்தது. கண்ணும் ஒளிபெற்றுத் தன் தம்பியின் பக்கம் திரும்பினான். அத்தம்பியின் தலையோ இப்பொழுது தரை நோக்கிச் சாய்ந்திருந்தது. "என்ன! விராடா," என்றனன் வேந்தன். "ஒன்று மின்ற" எனத் தாழப் பேசினன் தம்பி. "வருவன அறியோமாயினும் நன்மையே இனி நேரலாகும் என்ற நம்பிக்கையால் வளரும் ஆசைக்குரியவர் நம்மனோர். நிமித்தமும் நன்றாக, நீ நைவானேன்!" என்று வினவினான், வேந்தன்.

"நைந்திலேன், ஏதோ நினைவுபுகுந் துழக்குகின்றது எனதுள்ளத்தை;......என் மைந்தன் இன்னும் வாராதிருப்பதென்! நினக்கு நல்லதென்ற அந்நிமித்தங்கள் எனக்கும் நன்மையாகுமோ என ஏங்குகின்றேன்" என விராடன் உரைக்க, "ஆகாத தெங்ஙனம்!" என வியந்த மன்னனுக்கு விராடன் பதில் விளம்புமுன், தினகரனும் காலமாருதர்திறத்துத் தானைத்தலைவனும் அவ்வயின் எய்தி, "அரசே, யாங்கள் ஆயத்தமாயிருக்கின்றோம். பகற்பொழுது பெருகுமுன் போரினைத் தொடங்குமாறு பணித்தி" என வேண்டினர். விச்வகேசரி விராடன் முகத்தை நோக்கி, "இனி இதற்குரியன செய்" என இயம்பினான்.

"குறித்தபடி யாவரும் வந்துளீரோ, வீரர்காள், அழைமின், ஈண்டு அவர்தமை" என விராடன் விதிக்கக் காலமாருதரும் வஜ்ரதாரும் வந்து அரசனுக்குமுன் எதிர் எதிர் அணிவகுத்து நின்றனர். அவர்களைக் கண்ணுற்றபின் விராடன் காலமாருதர் திறத்துத் தலைவனை நோக்கி, "உன் சார்பில் ஒரு வீரன் குறைகின்றான்," என்ன அத்தலைவன், "இங்கிவர் தம்மை வெல்ல இருப்பவர் நாங்கள் போதும்" என்று வீரமொழிவிளம்பினான். "ஆயின், போர் துவக்குமின்" என்று விராடன் கூறுவதன்முன் தினகரன், "அற்றன்று. ஒருவன் குறைந்ததால் இவர் போர் தோற்றார் என்னும் பேச்சுப் பின்வர வேண்டா. ஆதலால், வந்திலா வீரன் யாவனெனத் தெரிவித்தால் எங்கள் பக்கத்தில் அவனுக்கு இணையானவனைப் போரிற்புகாமல் நிறுத்தி விடுவோம்" என்றனன். இதுகேட்ட விராடன் "அவ்வாறே ஆகுக" எனச் சாற்றிக் காலமாருதரை நோக்கி, "நும்மவருள் இன்று அணியிற் சேராதான் யாவன், இயம்புதி" என வினவக் காலமாருதர் தலைவன், "எம்மவர் யாவரிலும் இளையன் மாணன் என்பான் வந்திலன். வயதிற் சிறியோனாயினும் அவன் ஆற்றலிற் குறைந்தவனல்லன். அவனுக்கு நிகராக எதிர்த்திறத்தில் யாவரும் இருக்க இயலாதாகையால், அவர் ஒருவனை விடுத்துப் பொருவதும் ஒன்றுதான், சேர்த்துப்பொருவதும் ஒன்றேதான் எமக்கு. அவனின்றித் தோற்றோம் என்று நாங்கள் தோற்றாலும் சொல்லமாட்டோம், இது சரதம்" எனக் கூறினான்.

"நானே இதற்கு ஒவ்வேன். இவ்வுரை உரைத்த பின்னர் ஒருவனேனும் விஞ்சிய வீரர்கொண்டு பொருதிடல் எமக்கு இழுக்காகும். காலமாருதர் வாய்மைக்கு எம்முடைய வாய்மை குறைந்ததன்று. செருநர் குறைந்துள படையை எதிர்த்தல் பொய்ப்போரென்பர். மறைந்தகன்ற மாணன் யாவரிலும் இளைஞனென்றதால் எந்திறத்தில் மிக்க இளைஞனாகிய வஜ்ரதாத் தலைவன் மகேந்திரனே போரிற் கலவாது அயல்நிற்பதே நேர்மை. வயதிலன்றி, மாணனுக்கு உளதென்று நீ கூறிய ஆண்மை உண்மையாயின், அவ்வாண்மையிலும் நிகராய் நிற்பவன் எம்முடைய குரிசில் மகேந்திரன்" என்று மகேந்திரனுடைய பேரிற்கும் பழுதில்லாமல் அவன் போரிற்கும் புகாவகை தினகரன் நாடினான்.

பல்வேறு எண்ணங்களால் பதைத்திருந்த நெஞ்சத்து விராடனுக்கு இன்னபடி காலந்தாழ்வதால் கவலை உண்டாயிற்று. "ஆயின், வஜ்ரதாத் தலைவன் வரவேண்டா, மற்றவர் போர்க்களம் புகுமின்" என்று தூண்டினான். எனினும் காலமாருதர்திறத்து முதல் நின்று பேசியிருந்தவன் இதனிற் குடன்படாமல், "அஃதெங்ஙனமியலும்? அவர் திறத்துத்தலைவன் போர்முனை நின்றிடானேல் எந்தலைவன் பொருவதும் அழகன்று. தலைவனில்லாப் படையொடு பொருதனன் என்னும் பழுதிற்கு ஆளாய் நிற்கக் காலமாருதர் தலைவன் ஒரு போதும் இசைந்திடான்" என மறுத்துவிட்டனன். பார்த்தான் விராடன். தான் எண்ணிய எண்ணமெல்லாம் இப்போர்முறை அழிகிலே அழிந்துபோம் என அஞ்சினான். எனினும் அவனது கூரிய புத்தியில் ஒரு சூழ்ச்சி தோன்றியது. இருதிறத்தோரையும் நோக்கி, "வீரர்காள், நீவிர் இருவர் கூறியதும் தக்கதே. குறைந்த படையொடு பொருவதும், தலைவனில்லாத் தானையை அடர்ப்பதும் அழகிதன்று. ஆதலின்" என்று காலமாருதரை நோக்கி, "எம் படைஞருள் யாரேனும் ஒருவனை உம்மோடு சேர்த்துக்கொள்ளுங்கள். அப்பொழுது இருதிறத்து எண்ணிக்கையும் சமமாய்விடும்," என மொழிந்தனன். இதற்கு யாதும் எதிர் விளம்பத் துணிந்திலன் தினகரன். அவ்வாறு மறுத்துக்கூறினால் எவ்வாற்றாலும் தான் மகேந்திரனைப் போரிற் கலக்காவண்ணம் காக்க முயல்கின்றானென்னும் ஐயம் கொள்வரோ எனத் தாழ்ந்தது அவனுள்ளம். அப்பழி பலரறியப் பிறப்பதனினும் மகேந்திரன் சாவதெனில் அதுவே ஏற்புடைத்தென்று இவ்வீரன் துணிந்தனன். எனவே தினகரன் மறுக்காதிருந்ததால் விராடன், "எம் பொருநர்தம் இடையே சென்று உனக்கு ஏற்றவனைத் தேர்ந்து கொள்" என்று காலமாருதர் தலைவனுக்குக் கூறினான். அவனுஞ் சென்று, "யாரேனும் எம்சார்பு நின்று இவ் வஜரதரரைப் பொருதற்கு இயைவீராயின், வருக. விழைந்த பரிசில் வழங்குவோம்" என்று அழைத்தானேனும், கருணாகரர் வீட்டுக் கந்தனாக இம்மகேந்திரனை இரத்தினபுரியின்கண் இருந்த படைஞர் அனைவரும் அறிந்திருந்தாராகையால் அவனுக்கு விரோதமாக இன்று வாளேந்தி எதிர்ப்பதற்கு ஒருவரும் இணங்கவில்லை. உயிர்ப்பு உண்டோ இல்லையோ என்று நின்றிருந்த கந்தன் இப்பொழுது பொரும்பொறை ஆறுவான்போல் நெடுமூச்சு விட்டான். ஆயினும் என்! விராடனோ, "நம் படைஞர் எல்லாம் பசுக்கள் ஆய்விட்டாரோ! இவர்கிடக்க, இங்குச் சூழ்ந்து நிற்கும் நகரமாந்தர்களுள் நல்லாண்மை தாங்கிய வீரன் யாவனேனும் இருப்பினும் இருக்கலாம். அங்குச் சென்று அழைத்துப்பார்" என்னலும் காலமாருதர்களிற் சிலர் குழுமிச் சூழ்ந்திருந்த மக்களுக்கிடையே சென்று, "இந்நன்னகர் வாழ்வீர்காள். போர்செய எந்திறத்தில் ஒரு வீரன் குறைகின்றான். அதனிற்கு ஈடுசெய்ய யாரேனும் எம்மோடு சேர்ந்து இக்கடும்போரில் வஜ்ரதரரை உழக்க வருவீரோ. நுமதரசன் இதற்கு ஒவ்வினான். எந்தலைவனும் ஏற்ற பரிசில் நல்குவன்" என எங்கெங்கும் விளம்பரஞ் செய்தனர். இவ்வாறு விளம்புமளவில் சனங்களுக்குள்ளே குமுகுமுவெனப் பேச்சொலி கிளம்பியது. காளையர் இரண்டொருவர் களம்புகக் காலெடுத்து வைத்தாரேனும், "ஏதிது,! எம்நகர் வளர்ந்த இளவல் கந்தனுக்கெதிர் இகலவோ கற்றனை. அபிமானம் வேண்டாவா, அல்லது அப்புறம் அப்பெரியவர் கருணாகரர்தம் முகத்தைப் பார்ப்பதெவ்வாறென அறிவு வேண்டாவா" என மற்றவர் தகைந்து விலக்கினர். இன்னபடி ஏக முயல்வோரும் தகைந்தடக்குவோருமாக நிகழ்கையில் அக்கூட்டத்தின் ஓர் இடத்திலிருந்து 'கல்' என்ற பேரொலியொன்று தோன்றி யெங்கும் பரவியது. காலமாருத வீரனொருவனுடன் பேசிக்கொண்டு கலாநாதனே போர்க்களம் போகக் கண்டார். போரென்றால் பேருக்கேற்ற போர்ச் சாகசங்கள் இன்று சிலகாணலாகும் என்று பெரும்பான்மையோர் தம் உள்ளத்தில் மகிழ்ந்தாரேனும், 'என்னிது; கருணாகரர்கையால்வளர்த்த பிள்ளையொடு பொருதற்குக் கலாநாதனேயா போவது!' என்று சிலர் வெறுத்தனர். "சமரெனில், ஈன்ற தந்தையாயினும் ஏனென்னாது எதிர்க்கும் இம்மூர்க்கனுக்கு இதுவொரு பொருளோ! வலுவிற்சென்று சண்டைக்கிழுக்கும் இவனை வருந்தியழைத்தால், வாளா இருப்பானோ!" என்று சிலர் தெரிந்து கூறினர்.

கலாநாதனுடைய இயற்கையை அறிந்த அவ்வூரார் அவாறிந்தவரையில் கூறியன உண்மையேயாயினும், சமர்க்களம் புகுந்துடக்கும் இக்கம்மியன்தன் கண்ணெல்லாம் கந்தனையே குறித்துப் பாய்ந்தன. கந்தனும் இடியேறுண்ட இளமரம்போல் பிதிர்ந்த மனத்தோடும் உணர்வற்று இருந்தவிடம் பெயராது நின்றனன். தினகரன் தவிக்க லானான்.

T. N. சேஷாசலம்.

வெண்பாப் புலி என்ற புகழோடு விளங்கியவரும்
ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் மாணக்கரும் ஆகிய
ஸ்ரீ. தி. சு. வேலுசாமிப்பிள்ளை அவர்கள் இயற்றிய

கந்தபுராண வெண்பா

ஆறு காண்டங்களும் 5665 செய்யுள்களும் அடங்கியது.

இதுகாறும் வெளிவந்திராத இந்நூல் ஓதற்கினிய நேரிசை வெண்பாக்களால் அமைந்தது. அறுமுகக் கடவுளின் அருள்பெருகப் பாடிய இவ்வெண்பாக்கள் கற்றோர் இதயத்தைக் களிக்கச் செய்யும் தன்மையன.

விலை ரூ. **4-8-0**. வி. பி. சார்ஜ் வேறு.

மானேஜர், கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, சென்னைப்பட்டினம்.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான், K. S. வேங்கடரமணி M.A., B. L., ஆங்கிலத்தில் இயற்றியதும், இந்த நாட்டில் மாத்திரமல்லாமல் ஐரோப்பிய தேசங்களிலும் பெரிது கொண்டாடப் பெறுகின்றதுமான "Murugan, The Tiller" என்னும்

நாவல் நூலிற்கு

கிருஷ்ண குமாரி
என்பவரால் எழுதப்பெற்ற தமிழ் மொழிபெயர்ப்பு

கதையின் அழகும் வாழ்க்கையின் தத்துவங்களும், மாநட இயற்கையும் பலவேறு பாத்திரங்களின் அமைப்பும் வாய்ந்த இப்புத்தகம் எளியநடையில் அமைந்திருக்கின்றது. 400 பக்கங்கள் கொண்டது)

விலை ரூ. **1-8-0** (வி. பி. சார்ஜ் வேறு). மானேஜர்,
கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த
எங்கள் நிகரிலாத
"ஆநந்த குணபோதினி"
ஆடி மாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளை
யொப்ப நவீன நாகரீக உருவுடன்

அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக 3-வது ஆண்டு]வெளிவருகின்றது.[3-வது ஆண்டு பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S.G. இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத ஸஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில் தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜநவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவ ஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்தகுணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்குச் சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தாரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1 4 0 மாதிரி காப்பி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, சென்னை.

வியாஸங்கள்.

வியாஸங்கள்! வியாஸங்கள்!!

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதினால். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

	ரூ.	அ.		ரூ.	அ.
அஃபு	0	1	பொதுமதம்	0	2
பலவகை மனிதர்	0	1	ஆருதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொறுமை	0	1	கற்பு	0	3
இருவினை	0	2	அஸ்தபூஷணம்	0	4
இல்லறம்	0	2	பதினாறுபேறு	0	4
ஆலயவழிபாடு	0	2	என் தந்தையார்	0	6

மேல்கண்ட பதினான்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டுக்குக் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் இனாம்.

இன்றே எழுதுங்கள்!

நவீனகதா புத்தகசாலை,
மங்கயாரி வீதி, இரங்கூன்.

கம்பராமாயணம்
பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெருது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்பருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யுளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ்வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0
(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,
"கலா நிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை.

ஏமாங்கதத்
இளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலினுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமிழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப்பன வெகு சில.

விலை ரூ. 1 0 0
(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,
"கலா நிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைவாக்கம்,
சென்னை.

KAMBAN'S KOSALA
or
A Poet's Plea for Culture
by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*" 11, Vellala St., Purasawalkum, Madras.

வர்த்தமானம்.

ஆப்கன் கான்ஸல்:—மகமத் ஊஸ்மான்கான் என்பவர் ஆப்கன் கான்ஸல் ஜெனரலாய் நியமிக்கப்பட்டுள்ளார். பம்பாய் கான்ஸலாகக் குலாம் அஹமத்கான் நியமனம் பெற்றுள்ளார். கான்ஸல் ஜெனரல் தமது பதவியை ஏற்கப் பம்பாயிலிருந்து டில்லிக்குப் புறப்பட்டு விட்டார் என்று ஒரு தந்திச் செய்தி கூறுகிறது.

* * *

ராயபுரம் வைத்திய சாலை டாக்டர்:-ராயபுரம் வைத்தியசாலை டாக்டரான ஸ்ரீமான். எஸ். டி. ஆசார் என்பவர் மோட்டார் சைக்களில் ஏறிச் செல்லுகையில், ஜயில் வீதிக் கருகாமையில் டிராம்வண்டியில் இவரது மோடார் மோதிக்கொள்ள, இவருக்குப் பெருத்த காயம் ஏற்பட்டது. வைத்திய சாலையில் இருந்து வருகிறார்.

* * *

அரசர் பெருமான் தேகநிலை:—அரசர் பெருமான் தேக நிலையில் ஏற்பட்ட மாறுதல் அவரது பிரஜைகளுக்குக் கவலையைத் தந்துளது. அவருக்குச் சுவாசக் குழாய்சம்பந்தமான மாறுபாடு ஏற்பட்டுள்ளதெனத் தெரிகிறது. அரசவைத்தியர் அவரது சுவாசக்குழாயைப் படம் எடுத்துள்ளார். அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் கவலைப்பட வேண்டியதில்லை என்றும், அரசர் தேக நிலை சுகம்பெற்று வருகின்றது என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

* * *

போலீஸ் சார்ஜண்டுக்குத் தண்டனை:—பம்பாயில் சைமன்கமிஷன் பகிஷ்காரம் நடந்த சமயம் மாணவர்களைத் தாக்கிய குற்றத்திற்காக மாஜிஸ்திரேட் சார்ஜண்டுக்கு 100 ரூபாய் அபாரதம் விதித்தார். பிரதிவாதியின் தரப்பில் விடப்பட்ட சாட்சியத்தின்படி தாக்கியதற்கு அவசியம் இருந்ததாகத் தெரியவில்லை என்றும், மாணவ பகிஷ்காரிகள் கலகம் விளைத்தார்கள் என்பதற்குப் போதிய ருசு இல்லை என்றும் மாஜிஸ்திரேட் தீர்ப்பில் கூறியுள்ளார்.

* * *

சென்னையில் ஸ்ரீ பட்டேல்:—இந்தியச் சட்ட சபைத் தலைவரான ஸ்ரீ. வி. ஜெ. பட்டேல் சென்னை வந்துள்ளார். ஸ்ரீ லஜபதிராய் காலஞ் சென்றதை உத்தேசித்து அவர் உபசாரத்தையும் வரவேற்பையும் ஏற்க மறுத்து விட்டார். சென்னைச் சட்டசபைத் தலைவர், ஹிந்து பத்திராதிபரான ஸ்ரீமான் எ. ரங்கஸ்வாமி ஐயங்கார், வித்தியாசாகரபாண்டியா, ஸாமி வெங்கடாசலம் செட்டியார் முதலாயினோர் ரயிலடிக்குச் சென்று வரவேற்றனர். சென்னையில் இருக்கும்வரை ஸ்ரீ பட்டேல் சென்னைச் சட்டசபைத் தலைவரான ஸ்ரீ நரஸிம்மராஜுவின் விருந்தினராயிருப்பார் என்று தெரிகிறது.

* * *

டாக்டர் பெஸண்டின் சுற்றுப்பிரயாணம்:-எல்லாக் கட்சியினரும் சேர்ந்து செய்த நேரு கமிட்டியின் சிபார்சுகளைத் தென்னாட்டில் பிரசாரம் செய்யும் பொருட்டுட் டாக்டர் பெஸண்டு அவர்கள்தென்னாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்து வருகின்றார். சென்றவாரம் டாக்டர் பெஸண்டு திருச்சியில் நேரு அறிக்கையைப்பற்றிப் பேசினார். திருச்சியிலிருந்து மதுரை ஜில்லா சர்வகட்சி மஹாநாடு செல்வார். அங்கிருந்து புறப்பட்டு 30-ந்தேதி அவர் காசி ஸர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் பிரசங்கம் செய்யப்போவார். பிறகு வட இந்தியாவில் கான்பூர், லக்நௌ, அலகாபாத் முதலிய இடங்களில் சுற்றுப் பிரயாணம் செய்து சென்னை திரும்புவார்.

* * *

சம்மத வயது மசோதா:—பம்பாய் வக்கீலான போக்கர் என்பவர், கலியாண வயதை நிர்ணயிக்கும் சம்மத வயது மசோதாவைச் சட்டமாக்கி, மீறுபவர்களைத் தண்டித்தல் என்பது இஸ்லாம் மதத்தில் புகுந்து இடையூறு செய்வதாகு மென்றும், கல்வி போதிப்பதாலும் பிரசாரத்தாலும் சீர்திருத்தம் ஏற்பட வேண்டுமென்றும் இது விஷயமான சட்டம் இந்துக்களுக்கும் முகமதியர்களுக்கும் வருத்தத்தைத் தருமென்றும் கூறியுள்ளார்.

* * *

லார்ட் ரீடிங்கின் அபிப்பிராயம்:—இந்திய அரசியல் திருத்தத்தைப்பற்றி லண்டனில் ஒரு கூட்டத்தில் ரீடிங் பிரபு கூறியதாவது:—'1919-ம் வருஷம் கொடுத்திருந்த அரசியல் முறை திருப்திகரமாய் இந்தியர்களால் உபயோகப்படுத்திக் கொள்ளப்படவில்லை. இந்தியாவின் முன்னேற்றம் இந்தியர் காட்டும் கூட்டுறவில் தான் இருக்கிறது.' பிறகு ஸர்மைக்கல் ஓட்வியர், இந்தியாவின் பிரசனை சமூகத்தைப் பற்றியது என்றும், சமூக முன்னேற்றம் ஏற்படும்வரை அரசியல் மாறுதல் இல்லை என்றும் கூறினார்.

* * *

பம்பாயில் ஆசிரியர் தாக்கப்பட்டார்:— 'கட்ச்சுதர்சன்' என்னும் பத்திரிகை ஒன்று கத்தியவாரில் பிரசுரமாய் வருகிறது. இஸ்மெயில் கோஜா ஜமாத் என்பவரும், அகாகானும் சைமன் கமிஷன், இந்திய அரசியல் திருத்தம் முதலிய பிரச்னைகளில் கொண்ட அபிப்பிராயங்களை அப்பத்திரிகையின் ஆசிரியர் கண்டித்து எழுதி வந்தார் என்று கோபங்கொண்டு, பம்பாய் பந்தர் தெருவில் அவ்வாசிரியரை இரண்டு கோஜா வகுப்புச் சிறுவர்கள் தாக்கினர். கையிலும், தோளிலும் ஆசிரியருக்குப் பலமான காயம் ஏற்பட்டுள்ளதென்றும், வைத்திய சாலையில் அவர் சிகிச்சையில் இருக்கிறார் என்றும் தெரிகிறது. தாக்கியவர் இருவரும் கைது செய்யப்பட்டனர். ஆசிரியரின் நிலை கவலைக்கிடமானதா யிருக்கின்றதாம்.

* * *

பர்மாவில் இராஜப் பிரதிநிதி:—பர்மாவில் சுற்றுப் பிரயாணம் செய்து வரும் இந்திய இராஜப் பிரதிநிதி லார்ட் இர்வின் ஒரு விருந்துக் கூட்டத்தில் கூறியதாவது:—இந்தியாவும், பர்மாவும், இங்கிலாந்தும் எல்லாருடைய நன்மையையும் கருதி ஒற்றுமையுடனும், சினேக பாவத்துடனும் இருக்கவேண்டும். இதற்கு வெறும் பேச்சும், குரோதமும் துணை செய்யா. குற்றங் காணு மனமும் கருணையும் அவசியம். காலத்திற்கேற்ற மாறுதல்களும், நிகழ்ச்சிகளும் ஏற்படுவது சகஜம். கனவுகளைக்கண்டு கேட்க இனிக்கும் வார்த்தைகளைப் பேசுவதால்மட்டும்,வேண்டுவது வந்தமையாது. இருக்கும் உண்மையை அறிந்து அன்பைப் பெருக்கி வைக்கும் வழியில் எல்லோரும் முயன்றுவரின் எல்லோரும் சுகம் பெறலாம் என்பதை நீங்கள் அறிதல் வேண்டும். இந்தியரும் பர்மியரும், ஆங்கிலேயரும் நட்புடன் வாழ்ந்தால்தான் சீரும் சிறப்பும், ஏற்படும்.

* * *

சைமன் கமிஷனும், ஆங்கில உத்தியோகஸ்தர்களும்:—டில்லியில் சைமன் கமிஷனர்கள், இந்திய அரசியல் திருத்த முறையைப்பற்றி ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களை விசாரித்த காலை அவர்கள் கூறியதின் சாரம் வருமாறு:—

இந்திய அரசியல் முறையில் எத்திருத்தம் ஏற்படினும் சட்டம், போலீஸ், நியாயம் ஆய இலாக்காக்களின் நிர்வாகத்தைமாத்திரம் இந்தியர்களினிடம் விடுதல்கூடாது. வரவர இந்தியாவில் மதச் சண்டையும், ஜாதித்தொல்லையும் வளர்ந்தேவருகின்றன. ஆகவே மேற்படி இலாக்காக்கள் ஐரோப்பியரிடம் இல்லாதுபோயின் அமைதியிருப்பது கஷ்டம். இப்பொழுது இவை ரிசர்வ் இலாக்காவில் மாகாண கவர்ன்மெண்டின் கீழ் இருப்பதால், மாகாண கவர்ன்மெண்டார் இந்திய கவர்ன்மெண்டாரைக் கலந்து காரியங்களைச் செய்கின்றனர். மேலும் மாகாண அரசாங்கங்களுக்கு,அவசர சமயங்களில் தேவையானதைச்செய்ய அதிகமான அதிகாரங்களும்வேண்டும்.

18903

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"

11, Vellala Street, Purasawalkum, Madras.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11. VELLALA STREET.

Purasawalkam, MADRAS.

Prnted at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)